# பாரதமணி

ஆசிரியர்
கே. எஸ். வெங்கடரமணி

சுபானு வருஷம் ஆவணி மீ | விலை அணா 4 | AUGUST 1943





# "அவனுடைய பலம் எங்கிருந்து வருகிறது?"

இதர ஸ்திரீகள் தன்னுடைய குழந்தையைப் பற்றி புகழ்ந்து பேசும்போது தாய்மார்களுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகிறது. தங்கள் குழந்தைகள் தேக ஆரோக்கியமாக இருக்க அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிரமம் மெச்சக் கூடியது. போதிய பலம் இல்லாத குழந்தைகள் சீக்கிரம் சக்தியை இழந்து ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

உங்களுடைய குழந்தைகளுக்கு விடமின் கூடினதும், போஷாக்கை அளிக்க வல்லதுமான ஆகாரத்தைக் கொடுப்பது அத்தியாவசியம். இந்த சமயத்தில் தான் விடமின் சேர்ந்த டால்டா நன்கு உதவுகிறது டால்டாவினால் ஆகாரத்திற்கு சேர்க்கப்படும் விடமினும், ரக்ஷண சக்தியும் தான் பலத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் காரணம். குடும்பத்திலுள்ளவர்களுக்கு பலம் அவசியமாகையால் வேண்டிய ஆகாராதிகளை டால்டாவினால் சமையல் செய்யுங்கள்.



விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினால் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி இடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினால் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.




## விடமின் சேர்ந்த டால்டா

தாவர எண்ணெயால் தயார் செய்யப்பட்டதென்று உத்திரவாதமுள்ளது—சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 20-18 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY




ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
45, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

| | | |
|---|---|---|
| மாலை 10 | AUGUST 1943 :: சுபானு ௵ ஆவணி ௴ | முத்து 2 |


# பொருளடக்கம்


| | விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | .... | கா. சி. வேங்கடரமணி | 34 |
| 2 | கூத்தாடி | .... | 'ரஸிகன்' | 35 |
| 3 | தவறுதலும் தண்டனையும் | .... | 'பௌராணிகன்' | 44 |
| 4 | இலக்கிய அரசியல் | .... | ஸ்ரீ. சேதுராமன் | 50 |
| 5 | துர்எண்ணங்களைப் போக்கடிப்பது எப்படி? | .... | கண்ணன் | 52 |
| 6 | பதவீர் | .... | ர. பா. மு. கனி | 54 |
| 7 | நீர்நிலை அறிதல் | .... | ராஜம் | 58 |
| 8 | சிறுவர்பகுதி:— | | | |
| | நீதியின் வெற்றி | .... | கே. எஸ். ராமசாமி சாஸ்திரி | 62 |
| | யார் எறிந்தது | .... | 'புனிதன்' | 63 |



"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

கா. சி. வேங்கடரமணி

நமது அமைப்பில் கண்ணும், குரலுமே உண்மையான ஆள்காட்டி. இதர இந்திரியங்கள் ஆள்மூடி, ஆள்வெட்டி.

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் கண்களையும், குரலையும் கண்டு நான் மெய் மறந்தேன். சாந்தம் குடிகொண்ட பார்வையும், கருணை பொங்கிய குரலும், நாதக்கட்டு அழியாத சொல்லும், சத்தியமும் அவர் அகத்தில் கடைந்தெடுத்த வெண்ணைபோல், பூத்து நிற்கிறது. முதல் முதலில், நான் அவரை எப்பொழுது கண்டேன் என்பது எனக்கு ஞாபகமில்லை. அவரிடம்நான் நெருங்கியும் பழகியதில்லை சுவையை அறிந்து சப்புக்கொட்ட ஒருசொட்டுத் தேன் போதாதா?



தினசரி வாழ்க்கையிலேயே, கர்ம யோகத்தையும், கவிதை யோகத்தையும் நிஷ்காம்யமாய் அவர் நடத்தி வருவதால், அவரை ஒருதடவை பார்த்தால் மறக்க முடியாது. இந்த யோகத்தில் பிறந்த தூய்மையும், தெளிவும், சக்தியும் நம்மைப் பின் தொடர்ந்து வரும். நாதப் பிருமத்தில் லயித்திருக்கும் உள்ளமும், கவிதையும், அளவற்ற அறிவை அளந்துவிடும் இனிப்பான சொல்லும், பார்வையும், சில்ப சாஸ்திரத்தை ஒட்டி நிர்மாணம் செய்யப்பட்டதுபோல் தோன்றும் நெற்றியும், சதைப்பற்றில்லாத, உருவிவிட்ட சரீரமும் வாய்ந்தவர் திரு. வி. கலியாணசுந்தரம்.

2

26-8-1883-ல் பிறப்பு. மணம் 1912. மனைவியாரின் மறைவு 1918. படித்தது வெஸ்லிக் கல்லூரி. அதிலே சிலகாலம் தலைமைத் தமிழாசிரியர். ஆரம்ப வேலை ஸ்பென்சர் கம்பெனி எழுத்தாளர். 7-12-1917-ல் 'தேச பக்தன்' ஆசிரியர். பிறகு 'நவ சக்தி'யை ஸ்தாபித்து அதற்கு ஆசிரியராக 18 வருஷகாலம், பார வண்டியின் அச்சுப்போல், தானே அந்த முழுச்சுமையையும் தாங்கினார்.

சுழல் நிறைந்த அரசியலிலும், தொழிலாளர் இயக்கங்களிலும் சென்ற இருபத்தைந்து வருஷங்களாக ஒழிவன்னியில் திரு. வி க. பாடுபட்டு வருகிறார். இந்த மாதம் இவருக்கு அறுபதாம் ஆண்டு பூர்த்தியாகிறது. ஈசன் அருள் புரிய.

3

முப்பது வருஷங்களாகத் தமிழுக்கும், தொழிலாளர்களுக்கும், அரசியலின் முன்னேற்றத்திற்கும் கண்கொட்டாத சேவை. ஹிந்து நாகரீகத்தின் ஸாராம்சத்தை அடிப்படையாக கொண்டு, சமயவகுப்புவாத த்வேஷமேயில்லாத புத்துயிர் அளிக்கும் தொண்டு. ஏழை மக்களிடம் அளவற்ற அன்பு. கஷ்டத்திலும் கால்சோராத தொண்டு.

வேற்றுமையில் ஒற்றுமையைப்பார்க்க விரும்பும் கண்கள். பரிசுத்தமான மனது. களங்கமில்லாத உள்ளம். தானே பொங்கிப் பெருகி வந்து பயனளிக்கும் ஊற்று. தேங்கி நிற்கும் நலம் அல்ல. மானிட வாழ்வென்ற சேற்றில் பிறந்தாலும், சூரிய பகவானின் கருணையையும், கடாக்ஷத்தையும் தேடித் தத்தளித்து நிற்கும் தாமரைப் புஷ்பம்போல் திரு. வி.

கலியாணசுந்தரமும் தன் தொண்டைச் செலுத்தி வருகிறார். இவரைப் பார்த்தால் பசி தீரும். பாபம் விலகும்.

பெண்மணிகளின் அமைப்பு. அதே மனோபாவம். சேர்ந்து வாழ்ந்து களிக்கும் அன்பு. ஸம்பங்கிக் கொடியைப் போல் சார்ந்து படர்ந்து புஷ்பிக்கும் இயல்பு. தொட்டாற்ச் சுருங்கிபோல் உள்ளத்தை மூடிக்கொள்ளும் தமிழ்நாட்டில் இந்த உத்தம இயல்புக்கு ஆதரவு எது? ஆனாலும், தன் வேர் பலத்தாலே ஊன்றி நின்று படர்ந்து புஷ்பித்து வருகிறார் — திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

தூய்மையான தொண்டையே யோக சாதனமாகக் கையாண்டுவரும் திரு. வி. க வுக்கு ஈசன் ப்ரத்யக்ஷமாகி இவர் தனக்கு விரும்பும் ஸ்வானுபவத்தையும், பாரதமாதாவுக்கு விரும்பும் புத்துயிரளிக்கும் 'நவசக்தி'யையும் அருள வேண்டுமென்பதுதான் 'பாரத மணி'யின் மனமார்ந்த வேண்டுகோள்.

# கூத்தாடி

'ரஸிகன்'

**வெ**ள்ளைப்பாடிக் கண்கொடுத்த மாரியம்மன்கோயில் உற்சவத்துக் கூத்துக்குச் சுற்றுப்பத்து மைலிலிருந்த ஜனங்கள் ஏராளமாய் வந்து கூடியிருந்தார்கள். வைசூரியால் கண்ணையிழந்த ஒரு பெண் உற்சவம் பத்து நாளும் அந்த ஊரில் வந்து தங்கி உபவாசமிருந்து அம்மனை வேண்டினதின் பலனைக் கண் பார்வையைமீண்டுப் பெற்றாள் என்ற ஐதிகம் வெகுகாலமாக இருந்து வந்ததால் பலவிதமான வியாதிகளால் கஷ்டப்படுபவர்கள் உபத்திரவத்திலிருந்து விடுபடுவதற்கு வருஷாவருஷம் அங்கே வருவது வழக்கமாயிற்று. இவர்களைத் தவிர, ஸங்கீதத்தில் பிரியமுள்ளவர்களும் நாடக ரஸிகர்களும் முக்கியமாக வருஷந்தோறும் நடக்கும் கூத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். ஏனெனில் அந்த வட்டாரத்தில் ஸங்கீதஞானமுள்ள நட்டுவர்களும், பாடகர்களும் நிறைந்திருந்தமையால் அவர்கள் ஆதரவில் நடக்கும் கூத்து ஸாமாந்யமாயிராது என்ற நம்பிக்கை. வருஷம் தவறாமல் வருகிறவர்கள் 'ஒரு வருஷமாவது சோடைபோனதில்லை' என்று அநுபோகமிகுதியின் பேரில் சொன்னவார்த்தையைக் கேட்டு மேலும்மேலும் ஜனங்கள் வந்துபார்ப்பதும், ஒருதரம் பார்த்தவர்கள் அடுத்த தரம் வரும்போது பார்க்காதவர்கள் நாலுபேரையாவது அழைத்துவருவதும், இவ்விதம் வருஷத்துக்கு வருஷம் கூட்டம் அதிகரிப்பதுமாய் ஏற்பட்டது. சாயந்திரம் 25-நாழிகைக்கெல்லாம் தங்கள் ஊரைவிட்டுக் கிளம்பி ரஸ்தா மார்க்கமாயும் குறுக்குப்பாதை வழியாகவும் வரப்பு நடப்பு வழியாகவும் நாலா பக்கத்திலிருந்தும் திரள்திரளாக வெள்ளைப்பாடியை நோக்கிச் சாய்வார்கள். ஆண் பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகளே ஜாஸ்தி காணப்படும். ஆடவர்களும் தோளில் ஒரு குழந்தையும் கையில் ஒரு குழந்தையுமாய்க் காணப்படுவார்கள். நல்ல வேளையாய்ச் சோற்று மூட்டை கட்டவேண்டிய அவசியம் இல்லை. நூறுவருஷகாலமாக 'வெள்ளைப் பாடிப்பிள்ளை' என்று பிரஸித்தமான மிராசுதாரர் குடும்பத்தில் நடந்து வரும் ஒரு விசேஷ தர்மம், அந்த மாரியம்மன் உற்சவத்திற்கு வரும் ஜனங்களுக்கு இரவிலும் பகலிலும் குழம்புஞ்சோறும் தயிரன்னமும் பிசைந்து வேண்டிய வரையில் கொடுக்கபட்டுவந்தது. அந்தக் கடுங்கோடையில் மைல் கணக்காய் நடந்து வந்ததால் ஏற்படும் பசிக்கும் களைப்புக்கும் அந்தச் சோறு அமிர்தம் போல் இருக்கும். அதைச்சாப்பிட்டுப் பத்து தப்படிக்கு ஒன்றாய் இருக்கும் தண்ணீர்ப் பந்தல்களில் நீர்மோரோ,

பானகமோ, குளிர்தண்ணீரோ, வேண்டியதை வாங்கித் தாகசமனம் பண்ணிக்கொண்டு, "அப்பாடா!" என்று ஆசுவாசப்படுத்திக்கொண்டு, பிள்ளைவீட்டாரை 'தர்மப்பிரபுக்கள்' என்றுவாழ்த்தி அம்மன் அருளைப் புகழ்ந்து புளியந்தோப்பில் மேல் துணியை விரித்துப் படுத்து உறங்கிக் காலையில் எழுந்து தங்கள் ஊர்போய்ச் சேருவார்கள்.

ஆனால் கூத்து நடக்கும் ராத்திரிகளில் தூக்கம் ஏது? ராத்திரி பதினொன்ருய் விடும் ஆரம்பிக்க. குழந்தைகள் நன்ருய்த்தூங்கிவிடும். இரட்டைச்சாரியாயிருக்கும் தெருவின் மேலண்டைக் கோடியில் திறந்த வெளியில் அதற்கென்று நிர்மாணிக்கப்பட்ட மேடையில் அம்மன் கொலு வீற்றிருப்பாள். அவள் சந்நிதியில்தான் ஆட்டம். நாலு விசுப்பலகைகளைச் சேர்த்தாற்போல்போட்டு அவைகளுக்குப்பின் ஒரு பழைய படுதாவைத்தொங்கவிட்டு இருபக்கமும் வெளியே போக வழிவிட்டுக் கீற்ருல் அடைப்பு அடைத்துத் தலைக்குமேலும் கூரை வேய்ந்திருக்கும். வண்ணுன் இந்த அரங்கத்தைத்தன்னிடம்வெளுக்கவந்திருக்கும் சல்லாக்களால் அலங்கரிப்பான். அதாவது உள்பக்கம் நின்று பார்ப்பவர்களுக்குக் கீற்றுத்தெரியாமல் பக்கவட்டு அடைப்புக்களையும் கூரையையும் இந்த வெள்ளைத் துணிகளால் மறைப்பான். இந்த மேடைக்கெதிரேயுள்ள சமவெளியில் ஆண்பாலரும் பெண்பாலரும் தனித்தனியே உட்காரும் பொருட்டு நடுவே முழ உயரம் முளையடித்துக் கீற்ருல் வரிந்து கட்டப்பட்ட அடைப்பு ஒன்றுண்டு. அதற்கிருபுறமும் ஆறுமணியிலிருந்தே ஜனங்கள் கூட ஆரம்பித்துவிடுவார்கள். நாழி, பொழுது என்ற உணர்ச்சிகளெல்லாம் அவர்களைப் பாதிப்பதில்லை. நாடகத்தில் என்ன ருசியை எதிர்பார்த்தார்களோ அதுபோன்ற ருசியைத் ஆட்டம் ஆரம்பிக்கும் முன்னமேயே அனுபவிப்பார்கள். தெரிந்தவர் ஒருவரையொருவர் பார்த்துப் பேசுவதிலும், முன்பின் தெரியாதவர்கள் புதுப்பழக்கம் பண்ணிக்கொண்டு ஊர் யோக க்ஷேமங்களும் அகவிலை விவரங்களும் விசாரிப்பதிலும், அந்த வருஷக்கூத்துக்கு வந்திருக்கும் முக்கிய ஆட்டக்காரர்களையும் பாட்டுக்காரர்களைப் பற்றி அவரவர்க்குத் தெரிந்ததைச்சொல்லி உற்சாகப்படுத்துவதிலும், மடியில் தலையைவைத்துத் தூங்கும் குழந்தைகளின் பாரத்தால் கால் மரமரக்க அரைநாழிகைக்கொருதரம் காலைமாற்றி மாற்றி மடிப்பதிலும், அவ்வித மாற்றத்தால்தூக்கம் கொஞ்சம் கலையக் குழந்தைகள் முனகுவது கண்டு அவர்களைத்தட்டித் தூங்க வைத்துக்கொண்டே பேச்சை நிறுத்தாமல் நடத்துவதிலும் பொழுது போவதே அவர்களுக்குத் தெரிவதில்லை. அதுவும் இந்த வருஷம் பேச்சுக்கு ரொம்ப ஸ்வாரஸ்யமான விஷயங்கள் இருந்தன. மூன்று வருஷமாய் அந்தக் கூத்தில் நடிக்க வராத ரங்கசாமிப்பிள்ளை — 'குழலைப்பழிக்கும் குரல்வாய்ந்த ரங்கசாமி' என்று பிருது பெற்ற பிரபல ஆட்டக்காரன்—திரும்ப இந்த வருஷம் மேடையேறப் போவதாக அவர்கள் கேள்விப்பட்டதே அவர்கள் பரபரப்புக்கு முக்கியக் காரணம்.

"ரங்கசாமியில்லாமல் மூணுவருஷமாக் கூத்துக் கூத்தாவேயில்லை" என்ருர் கோணவாய்க் கிருஷ்ணய்யர் குஞ்சிதபாதத்தைப் பார்த்து. அவன் ஒரு பரிஹாஸச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "அதென்ன, அவ்வளவு அபூர்வ வேலைக்காரன் என்ன?" என்று கேட்டுவிட்டு அவர் பதிலளிக்குமுன் "தெருக்கூத்துக்கென்னவந்தது! அரிதாரம் பூசினவனெல்லாம் ஆட்டக்காரன்தான்" என்று அலக்ஷியமாய்ச் சொன்னுன். இது வெகுகாலத்து அநுபோகஸ்தன் பேச்சல்ல. குஞ்சிதபாதம் முதல் முதல் கூத்துப் பார்க்கப் போவது இன்றைக்குத்தான். அவனும் கிருஷ்ணய்யரும் அடுத்த ஒரு மைலிலுள்ள அக்கிரகாரத்தில் வசிப்பவர்கள். குஞ்சிதம் ஸ்திரவாஸியல்ல. தற்காலம் தங்கியிருப்பவன். அவனுக்கு அந்தவூரில் சொற்பக் குடித்தனமும் ஒரு வீடுமுண்டு. அவன் சென்னைப்பட்டணத்தில் உத்தியோகம் பார்த்து வந்தான்.

முதலாளியிடம் ஏதோ மனஸ்தாபம் ஏற்படவே வேலையை ராஜிநாமாச் செய்து வேறு இரண்டொரு இடங்களில் பார்த்தும் கிடைக்காததால் தன் கிராமத்தில் கொஞ்ச காலம் அக்ஞாதவாஸம் பண்ணுவதென்று தீர்மானித்து அங்கே வந்து ஆறுமாதமாயிற்று. இன்னம் விமோசனத்துக்கு வழியைக் காணேம். ஊருக்கு வந்து மாஸம் ஆறாகியும் இன்னும் கிராமாந்தர வழக்கங்கள் அவனுக்குப் பிடிபடவில்லை. "இப்போ இப்போதான் யாரையாவதுகண்டால் ஆகாசத்தைப் பார்த்துண்டு போகாமெகின்னு 'என்னசேதின்னு' கேழ்க்கணும்னு தெரியறது" என்று அவ்வூரார் சொல்லிக் கொண்டதிலிருந்து அவன் மனப்பான்மை ஒருவித மாறுதலையடைந்துவருகிறது என்று ஊகிக்கலாம். அவன் இறுமாப்புக்காரனல்ல, ஒருவருடனும் தான் பேசக்கூடாதுஎன்று எண்ணுபவனுமல்ல. அநாவசியமாய்ச் சமாசாரமில்லாமல் வம்பு வளர்ப்பதென்ருல் வீண் காலச்சேதமென்று பட்டணப் பழக்கத்தை யொட்டி நடந்து வந்த அவனுக்குக் கிராமாந்தரத்தில் அந்தக்கொள்கைக்கிடமில்லை யென்பது நாளடைவிலேதான் தெரியவந்தது.

அவன் ஊருக்கு வந்த புதிதில் தெருக்கூத்துப் பார்க்கப் போகலாமென்று யாராகிலுமவனைக் கூப்பிட்டிருந்தால் அவன் விழுந்து விழுந்து சிரித்துத் தானிருப்பான். அவன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் இரண்டொரு முறை ஊருக்கு விடுமுறைக்கு வந்திருக்கையில் வெள்ளைப் பாடிக் கூத்துப்பார்க்க வேணுமென்று ஆசைப்பட்டபோது அவன் தாயார் "சே! பள்ளி பறை கூடற இடத்திலே போய்க் கூத்துப் பார்ப்பாளோ!" என்று சொன்ன அலக்ஷிய வார்த்தை இன்றைக்கும் அவன் காதைவிட்டு அகலவில்லை. பிற்காலங்களில் ஆங்கிலப் படிப்பின் காரணமாகக் கிராமாந்தரங்களுக்குச் சொந்தமான தெருக்கூத்து அநாகரிகமான விவஹாரமென்றே அவன் நம்பி வந்தான். ஆனல் இப்பொழுது ஆறு மாதம் அடைவாய் ஊரிலிருந்து வந்ததிலிருந்து கிராமாந்தரத்தைப்பற்றி அவன் கொண்டிருந்த கொள்கைகள் பல மாறி வந்தன. ஊரிலுள்ள சில்லறைச் சச்சரவுகளும் கக்ஷிகளும் ஈர்ஷையும் ஒருபக்கம் வெறுப்புண்டாக்கினுலும் ஏழைகள் வயிறு வளர்க்கப் படும் பாடும் ஒருவருக்கொருவர் கஷ்ட சுகங்களில் வஞ்சகமில்லாமல் உதவும் ஸ்வபாவமும் படிப்பில்லாமற்போனுலும் இயற்கை வாசனையாலும் பூமியில் பாடுபடுபவருக்கேற்படும் நிரந்தரபுத்தியாலும் ரொம்பப் படித்தவர்களும் பெருத நிதானமும் அடக்கமும் அவர்களிடம் இருக்கக் கண்டு மெச்சினன். இவ்விதம் காலந் தள்ளும் ஜனங்கள் கண்டுகளிக்கக்கூடிய காக்ஷியில் தான் பட்டண வாசங்களில் பார்த்திருக்கும் நாடகங்களில் காண முடியாத ஒரு வசிகர சக்தி யிருந்தாலும் இருக்கலாம் என்று படக் கோணவாய் கிருஷ்ணய்யர் வெள்ளைப்பாடிக் கூத்துப் பார்த்து வரலாமென்று கூப்பிடவே அவன் சம்மதித்தான்.

அவருடைய உற்சாகமே அவனை யிழுத்தது. அவர் கூத்தில அபாரப் பிரியர். எப்போதும் அந்தக் கூத்துக்களில் விமரிசையடைந்த பாட்டுக்களைச் சத்தமில்லாமல் அவர் பாடுவதைக்கண்டு அப்படிச் செய்வதால் வாய் கோணுவதைப் பரிஹஸிக்கும் சிறு பையன்கள் அவருக்குக் 'கோணவாய்' என்று பட்டம் கட்டிவிட்டார்கள். குஞ்சிதம் அலக்ஷியமாய்ச் சொன்ன வார்த்தைக்கு அவர் நிதானமாக, "நீ ரங்கசாமி ஆட்டத்தைப் பார்த்திருந்தா அப்படிச் சொல்லமாட்டே. எல்லாரும் ஆட்டக்காரன், அவனும் ஆட்டக்காரன்னு சொல்லிப்படலாமா? அந்தச் சந்திரமதி புலம்பலிலே பாரு இன்னிக்கி, பட்டமரமும் பாலா உருகும்" என்ருர்.

"ஆமாம், இவ்வளவு அசஹாய சூரன் என்கிறேளே, அவன் சினிமாவிலே ஆடப்போகல்லியா? இப்போதான் கையைக் காலைத் தூக்கத் தெரியாத கழுதை எல்லாம் சேப்புத் தோலிருந்தாப்

போரும்—சினிமா நக்ஷத்திரங்களாக விளங்கறதே" என்றான் குஞ்சிதம்.

"சே! அப்படியெல்லாம் தொழில் முறைமைதவறிப் போறவனில்லே அவன். பேராசைபிடிச்சவனுமில்லே. வீடு வாசல் நிலபலமெல்லாமிருக்கு. தொழில் நடத்தித்தான் ஆகவேணும் என்கிற தில்லே. பகவான் கொடுத்திருக்கிற சாரீரத்தையும் ஸாமர்த்தியத்தையும் வீண் போக்கப்படாது என்கிற அக்கரைலே தான் அவன் தொழிலே விடாமெயிருக்கான். கவாய் கோவிந்தஸாமி கிட்டத் தயாரானவனில்லியா? குருவினிடத்திலே விசேஷ பக்தி. அவனைப்போலவே அம்மன் ஸந்நதியிலே ஆடாதுன்னு பரவசமாகத்தானடுவான். தொழிலைத் தொழிலாகவே பாவிச்சவனில்லே, தெய்வ கைங்கரியமாகத்தான் நடத்திவரான். அதுவும் நம்ம கண்கொடுத்தவளிடம் அபார பக்தி."

"அப்படியிருக்கறத்தே என் மூணுவருஷமா வரல்லே இங்கே ஆட்டத்துக்கு?"

"அந்த வயத்தெரிச்சலை என்கேக்கறே! ஆணைக்கும்அடிசறுகும்என்கிறாப்போலே எவ்வளவு தீரனாயிருந்தாலும் மேதையாயிருந்தாலும் அவனுக்கும் எதாவது ஒரு குந்தகம் இருந்துதான் தீறது. பகவத் ஸங்கல்பம். கலியாணங்கார்த்தி பண்ணிக்கிண்டு, புள்ளெ குட்டியோடே ஒழுங்காத்தான் காலக்ஷேபம் பண்ணிண்டிருந்தான். இந்தவூர் பிள்ளைக்கெல்லாம் உறவு முறை வீட்டுப்பெண்தான். ரொம்ப நல்ல பொண்ணுன்னும் கேழ்வை. நாலு வருஷத்துக்கு முன்னே, இந்த ஊர் உத்ஸவமான அடியோடே கிழாநத்தத்திலே **தாராசசாங்கம்** போட்டானுக, எராளமா ரூபா செலவழிச்சு, சீனெல்லாம் தயார்பண்ணி அஸல் பார்ஸி **ட்ராமா**விலே பண்ணனாப்பிலே. ரங்கசாமிதான் சசாங்கன் பார்ட்டு. தாரைக்கு ஒரு கூத்தாடிச்சி (ஜாதிக் கூத்தாடிச்சி— ரங்கசாமி வெள்ளாழன்னு) வந்திருந்தா. பதினெட்டு வயசிருக்கும். தந்த பொம்மையாட்டமா வெள்ளெவேளேருன்னு மூக்கும் முழியும், அவபாக்கற பார்வையிலேயே ஆள்மயங்க வேண்டியதுதான். அபூர்வ ரூபலாவண்யம். அதுக்குத்தகுந்த சாரீரம். பிருகாக்கள் என்னமாப்பேசித் தூங்கறே, மேல் ஸ்தாயிலே! நம்ம ரங்கசாமி குரலும் அவ குரலும் இழைஞ்சு வெகு ரம்யமா ஜில் லுன்னு சின்டைப்புடிச்சுன்னு குலுக்கித்து. இழைச்சல் சாரீரத்தோடே மட்டும் இருந்திருந்தாத் தேவலே. மற்ற விவஹாரங்களிலேயும் ஏற்பட்டுப் போச்சு. மூணுநாள் கூத்து முடிஞ்சுது, அவ்வளவுதான், ரங்கசாமி ஊருக்கு வரப்போறான்னு நினைச்சுண்டிருக்கா எல்லாரும், ஆளைக்காணும். கன்னுகன்னியாப் பேச்சுக் கிளப்பிட்டுது, கூத்தாடிச்சியை அழைச்சுண்டு ஓடிப்போய்ட்டான்னு. நான் என்னவோ வெகு நாள் வரைலும் அதை நம்பல்லே. மனுஷன்னு இருக்கறதுதான், அப்படிப் பார்த்தா யார் சுத்தன்? அதுவும் 'கூத்தாடி குரங்கோட்டி'ன்னு கேழ்விப்பட்டதில்லையா? இதிலெல்லாம் தப்புத்தண்டா இல்லாமல் தப்பமுடியாது. இருந்தாலும் அதுக்கொரு 'நிமிட்'(லிமிட்) இல்லையோ? வீடு, வாசல், புள்ளே, குட்டி, கட்டின பொண்டாட்டி எல்லாத்தையும் விட்டு ஒத்தன் ஓடிப்போறதுன்னு அது தர்மமா? இல்லெ, இந்தத் தட்டுக்கெட்ட கழுதைகள் வெச்சுண்டு குடித்தனம் பண்ணறத்துக்கு லாயக்கா? சும்மா மில்டேரியா நிக்கும், எல்லா எழவும் இவன் எடுக்கணம், புடவை முதல் தோச்சுப்போட்டு. தவிரக் கீழ்ஜாதிக் கழுதை, அதுக்கென்ன நாணயம் இருக்கப் போறது? இன்னிக்கிவன், நாளைக்கின்னம் யாரோ?"

"இப்போ அவ இருக்காளா?"

"நல்ல வேளையாப்போச்சு, போன வருஷத்திலே பிள்ளைப்பெத்து, குழந்தை வயத்திலே மதிச்சு அவ செத்துப்போய்ட்டாளாம். எங்கேயோ ரெண்டு மூணு வருஷம் பிணங்கு, சிங்கப்பூரு, மலாய், கொழும்புலேல்லாம் ரெண்டுபேருமா ஆடி வெகு சொத்து சம்பாதிச்சான்னு கேழ்வி. ஆனல் அவனை, மறுபடி நாலு மாசத்துக்கு

பின்னே பார்த்தபோது அவன் கையி லே அரைக்காசு இருந்ததாகத் தெரிய ல்லே. காக்கா பிடிக்கிற பைத்தியார னுட்டமா இருந்தான். தலே ஜாடா நரை ச்சுப்போச்சு. ஆளே உருமாறிப் போய்ட்டான். எனக்கு வெகுநாளேப் பழக்கம், ரொம்ப அந்நியோந்நியமா யிருந்தோம் ஒரு காலத்திலே. இருந் தாலும், அவன் இருந்த ஸ்திதியைப் பார்த்தபோது அவனேப்பழைய விருத் தாந்தங்கள் கேழ்க்கறத்துக்கே அச்சமா யிருந்தது. 'என்ன ரங்கசாமி, வெகு நாளாச்சே கண்டு, எங்கெயோ வெளி நாட்டுக்கெல்லாம் போயிருந்ததாகக் கேழ்விப்பட்டேனே?' ன்னேன். 'எங் கெயோ கெட்டலேஞ்சேன் அய்யா. அம்பல் கழுதை அம்பல்லே கடந்தா என்ன அடுத்த திருமாளத்திலே கடந்தா என்ன? போவுது, நீங்க தெடமாயிருக் கீங்களே; வூட்டுலே கொளந்தெ குட்டி யெல்லாம் சவுக்கியந்தானுங் களே?' என்று பேச்சைமாத்தினன். பழஞ்சேதி கேழ்க்கவாண்டான்னுட்டு, 'வெள்ளேப்பாடி திருவிழா நீ யில்லாமெ எங்களுக்கெல்லாம் ரொம்பக் கொறை யாயிருக்கு, இந்த வருஷமாவது வரு வாயா?' ன்னேன். வரலாமுன்னுதான் நெனச்சுக்கிட்டிருக்கேன். மகமாயி என்ன நெனச்சுக்கிட்டிருக்காளோ? ரொம்ப அவராதம் பண்ணிப்புட்டேன்' என்று அவன் சொன்னது பரிதாபமாயி ருந்தது. எனக்கு அழுகைகூட வந்து ட்டுது. நல்லபயல். 'அம்பாள் ஒனக் கொண்ணுங் குறைவு பண்ணமாட்டா, போ' என்று சொல்லித் தேத்தினேன்' 'ஏதோ, பெரியவங்க நல்ல வாக்கு'. ன்னு சொல்லிப்போனன். அதுலே ருந்து மறுபடி அவன் ஆட்டம் பாக் கணும்னு ஒருபெரிய ஆஸ்தை."

"அய்யாவுக்கு எந்த ஊரு?"

தனக்குப் பின்னிருந்து இந்தக் கேள்வி கிளம்பவே கிருஷ்ணய்யர் திரும்பிப் பார்த்தார். அவர்கள் உட்கார்ந்திருந்த இடம் சற்று ஒதுப்புறமாயிருந்தது. அடுத்தவூர் மிராசுதாரர்களானபடியா லும், கிராமாந்தரக் கூத்துப்பார்ப்பதற்கு அதிகமாய் பிராம்மணர்கள் வருவது வழக்கமில்லாததாலும் குஞ்சிதபாதம் முதலிலேயே "நாம் கொஞ்சம் எட்டவே இருப்போம், நடுவிலே போய் மாட்டிண்டாக் கிளம்ப முடியாது" என்று மறைபொருளாய்ச் சொன்ன தின் கருத்தையறிந்த கிருஷ் ணய்யர் அந்தவிடத்தில் கூட்டமதிக மாக இல்லாமையாலும் மேடை அங் கிருந்து பார்த்தால் நன்ருய்த் தெரிய, அங்கிருப்பவரை மேடையிலிருந்து சட் டென்று தெரிந்துகொள்ள முடியாதென் பதைக் கண்டும் அங்கேயவனேயழைத்து வந்திருந்தார். தன்னே 'எந்த ஊர்?' என்று இங்கே யார் விசாரிக்கக் கூடியது? என்று சற்று அவஸரமாய்த் திரும்பின அவர் சுமார் முப்பத்தைந்து வயதுள்ள ஒரு வேளாள ஸ்திரீயைக் கண்டார். பார்த்தால் நல்ல குடியில் பிறந்தவளா கவும் மரியாதையாய்க் காலக்ஷேபம் பண்ணி வருபவளாகவும் பட்டது. சுண்டுவிரல் மொத்தம் பொன்கொடியில் கோர்த்துக் கட்டியிருந்த குண்டு திரு மங்கலியமும் மூக்கிலிட்டிருந்த சாதா மூக்குப்பொட்டும் தவிர வேறு ஆப ரணங்கள் காணப்படவில்லே. என்று லும் வெகு நகைகள் போட்டுக்கொள்ள உரிமையுள்ளவளென்றும், ஒரு காலத்தில் போட்டிருந்திருக்க வேண்டுமென்றும் தோன்றினதற்குக் காரணம் அகாலத் தில் ஏற்பட்டிருந்த முன்னச்சி மயிர் நரையும் அவள் கண்களில் அகாதமாய் அசைவற்றுத் தோய்ந்து நிற்கும் சோக முமேயெனலாம். கையில்பாக்குவெட்டி பிடித்து வெட்டுப் பாக்கைச் சீவி வாயில் போட்டுக்கொண்டு வெற்றிலேயைச் சுண்ணமிட்டுக் கொண்டிருந்த அவள் எண்ணமெல்லாம் வேறு எங்கேயோ இருந்தாப்போல் காணப்பட்டது. ஏழு வயதுப் பையன் ஒருவன் அவள் பக்கத் தில் உட்கார்ந்து மேல்துணியை இடக் கையால் பற்றி உடம்போடு உடம்பாய் ஒட்டிக்கொண்டிருந்ததைக் கவனிக்க குஞ்சிதத்திற்கு அகாரணமாய் மனதில் ஒரு வேதனே உண்டாயிற்று. ஆகை யால் அம்மாது கேட்ட கேள்வியிலிருந்து

பேச்சு வளருமா என்று அவன் ஆவலுடன் எதிர்பார்த்தான்.

கிருஷ்ணய்யர், "ஆறுவேலி" என்று பதில் சொல்லிப் பின்னோடு "உனக்கெந்தவூர் அம்மா?" என்று வயதுமுதிர்ந்தவர்களுக்குள்ளஸ்வாதீனத்தோடு கேட்டார்.

'கிட்டத்தான், அய்யா, காறைமோடு' என்றதைக்கேட்டு "காறைமோட்டிலே யார்வீடு? எனக்குத் தெரியாத பிள்ளைமார் வீடு கிடையாதே" என்றார் கிருஷ்ணய்யர்.

மரியாதைக் குறியாய்ச் சற்றுத் தணிந்த குரலில், "நாராயணபிள்ளெவூடு" என்று சொல்லிவிட்டு, "அய்யாவெப் பாத்த மொகமாயிருந்ததுன்னுதான் கேட்டேன்" என்றாள்.

கிருஷ்ணய்யர் குஞ்சிதத்தைப் பார்த்து, "நீ காறைமோடு போனதில்லியே. பெரிய வெள்ளாழ கிராமம். எல்லாரும் தெம்பான பேர்வழிகள், யோக்கியன்கள்" என்று சுருக்கமாய்ச் சொல்லிவிட்டுப் பின்னும் அந்த ஸ்த்ரீயைப் பார்த்து, "நம்ம ரங்கசாமிக்குக் கூட உங்க ஊரிலெதானே கலியாணம்?" என்று கேட்டு, உடனே தான் கேட்ட கேள்வி அலௌகிகமென்று எண்ணினாற்போல், "காறைமோட்டிலே ரெண்டு நாராயண பிள்ளெ இல்லே?" என்று இன்னொரு கேள்வியும் பின்னோடு கேட்டார். அவள் அதற்குப் பதில் சொல்லாமல் நிதானமாகவும் ஸகஜமாகவும் முதல் சொன்ன வார்த்தைக்குப் பதிலாய், "ஆமாம், எங்கவூர்லெதான் ஆட்டக்காரர் கட்டினது—எங்க ஒறமொறெலேதான்" என்றாள்.

இவ்விஷயத்தைப் பிரஸ்தாபிப்பது அநுசிதமில்லையென்று தைரியங்கொண்ட கிருஷ்ணய்யர் மேலும் மேலும் உத்ஸாஹமாய்ப் பேசத் தொடங்கினார். அவருக்கே வம்பில் கொஞ்சம் அதிகப் பிரியம். அதுவும் தனக்கு வெகுகாலத்துப் பழக்கமான ரங்கசாமியைப் பற்றிப் பேசும் தருணம் வாய்த்தால் வெறுமனேயிருக்க முடியுமா? அவன் ஆட்டத்தில் அவருக்கு இருந்த மோகத்தால் அவனைப்பற்றின யாவத்ஸமாசாரத்திலும் ஒரு தனிப் பட்ட ருசி இருந்தாலும் பெண்பாலுடன் பேசுகிறோமென்னும் எண்ணத்தை வைத்துக்கொண்டு, கொஞ்சம் அநுதாபம் காட்டும் குரலில், "ஐயோ பாவம். நல்ல பொண்ணுன்னு கேழ்வி, இந்தப் பாவிப் பயல் இப்படிப் பண்ணுவான்னு யார் நெனச்சா?" என்றார்.

"தலேலெ எழுத்து யாரெவிட்டுது அய்யா. அவுங்க அவுங்க பொறியெ அவுங்க அவுங்க தொலெச்சுத்தானே ஆவணும்!" என்று அவள் பதில்சொல்லுவதில் ஒரு தீவிர விரக்தியிருந்தது போல் பட்டது, கவனமாய் இந்தச்சம்பாஷணையைக் கேட்டுவந்த குஞ்சிதத்திற்கு.

"நூத்துலெ ஒருவார்த்தை அம்மா நீ சொல்றது. இருந்தாலும் ரங்கசாமி இப்படிப் போவான்னு நான் நினைக்கல்லே. அவன் என்ன பரம்பரை ஆண்டியா? பஞ்சத்துக்காண்டிதானே; நல்ல குடியிலே பொறந்து நல்ல சகவாஸமிருந்து கண்ணியமாக் காலந்தள்ளணம்னு இருந்தவன் தானே. கூத்துலே சேர்ந்தா என்ன, கூத்தாடி நடத்தை வந்துடணுங்கற அவசியமில்லியே. அவனும் அப்படித்தானே இருந்தான். கஷ்டகால வேளை அந்த ஜாடுமாறிக் கழுதை வந்து சேர்ந்தது" என்று இடத்துக்குத் தகுந்தபடி ஆண்பிள்ளை யொழுங்கீனமாயிருப்பது ரொம்பக் கேவலமென்ற கொள்கையைத் தான் கைப்பிடித்ததாகப் பேசினார்.

அவள் சொன்ன பதிலைக்கேட்டுக் குஞ்சிதம் திடுக்கிட்டான்.

"அவ என்ன பண்ணுவா, அய்யா? அவரெத்தான் சொல்லி என்னபலன்? ஆண்புள்ளை ஒழுங்கா யிருக்கும்படி நடந்துக்கத் தெரியாத பொம்மனாட்டி அய்யோ தெய்வமேன்னு தெய்வத்துக் கிட்டே முட்டிக்கவேண்டியதுதான் தெய்வம்தான் என்னபண்ணும்?"

"அதென்ன அம்மா அப்படிச் சொல்றே? ஆம்படையான் அவிசாரிக் கள்ளனுப் போறத்துக்குப் பொண்டாட்டியையா குத்தஞ் சொல்றது? எத்தனையோ பயல்கள் ரம்பையாட்டமா வீட்டிலே பொம்மனாட்டியிருக்க கரிக்கட்டையாட்டமா மூஞ்சியும் மோறையும் கோரம் கொதிக்கிற கழுதைகளைக்கட்டிண்டு மாரடிக்கல்லியா? இதெல்லாம் பிராரப்தம்தான். வேறென்னத்தைச் சொல்றது."

"உண்டுங்க, ஆனு பொம்மனாட்டியும் எனந் தெரிஞ்சு போவணும். ஆட்டக்காரரெப்பத்தியல்ல பேசிக்கிட்டிருந்தோம். அவர் கட்டின பொண்ணு நல்ல பொண்தான். ரொம்ப அடக்க ஒடுக்கமானவ. இருக்கிற சோடே தெரியாது. குடித்தனம் பண்ணறத்திலே கெட்டிக்காரி. எல்லாம் இருந்து என்ன? புருசன் மனசறிஞ்சு நடக்கத் தெரியல்லியே! அது அவ தலையெழுத்துத்தான். ஆராவது சாமாந்நியமா குடித்தனப் பாங்காயிருக்கறவனுக்குக் கட்டிக்குடுத்திருந்தா ஒரு தினுசாயிருந்திருக்கும். அவர் ஏதோ குடித்தனம்பண்ணினுரேயொளிய சொத்து சொதந்தரம் ஒண்ணிலேயும் பத்தில்லே. எப்போதும் ஆடல், பாடல், கேளிக்கை, காலச்சேபம்னு வூட்டுலே யாராவது வந்துக்கிட்டேயிருப்பாங்க. அவுங்களுக்கு ராசோபசாரம் நடக்கும். நல்ல பாட்டுக்காரங்களை ஆட்டக்காரங்களைக் கண்டாப்போரும் அவருக்கு, ஒலகமே மறந்துபோவும். அவளுக்கு இதெல்லாம் பிடிக்கிறதில்லே. வெள்ளாழப் பொண்ணில்லியா, செட்டுங் கட்டுமாக் குடித்தனப் பண்ணி வழக்கம், 'ஐயோ! ஆரோ வழியிலே வந்தவனெல்லாம் தின்னுட்டுப் போறுனே' ன்னு திக்குத்திக்குங்கும். அத்தோடெயில்லெ. அவருக்குப் பாட்டிலே கூத்துலே எவ்வளவு பிரியமோ அத்தனைக் கத்தனை அவளுக்கு வெறுப்பு. இத்தனைக்கும் நல்ல தொண்டை, நல்ல ராகம் இருந்தது. அவரும் வேணும்னு எவ்வளவு ஆவலாப் பாட்டுச் சொல்லி வெச்சாரு, பிடில் கத்துக்கொடுத்தாரு. எல்லாம் நல்லா வரவும் வந்தது. அப்படியிருக்க அவர் ஒருபாட்டுப்பாடச் சொன்னுப் பாடமாட்டா. நம்ம குட்டாளி, 'வள்ளி, ஒருபாட்டுப் பாடுடீன்னு, மூஞ்சியைச் சுளுக்கிக்கிட்டு, 'ஆமாம், பாட்டுலெண்ணு தான் கொறை. எம்பாட்டுத்தான் பெரிய பாட்டாயிருக்கே' என்பாள். அந்தத் தொழில்லே யிருக்கறவங்களுக்கு எல்லாரும்தான் சிநேகம். தட்டுக்கெட்ட கழுதைகளும் வரும். ஆடும்,பாடும்,சிரிக்கும், கும்மாளமிடும். அவளுக்கு நாக்கைப் புடுங்கிக்கணும் போலே யிருக்கும். அவரு ஒழுங்குதப்பா யிருந்தாருன்னு சொல்லறத்துக்கில்லே. ஊர்லேயே— எங்க ஊரு பொல்லா ஊரு. வம்பளக்க, ஒண்ணுன்னுப் பத்துன்னு முடிச்சுப் போட்டுடுவானுவ, அங்கேயே — அவரைப்பத்தி ஒத்தரும் தப்பாச்சொல்லல்லெ. அவளும் அவர் நடத்தை தப்புன்னு உள்ளபடி எண்ணல்லெ. 'எண்டி வள்ளி, புருசனுக்குத் தகுந்தாப்பிலே நடக்க வாண்டாமா?' ன்னு அவ ஆயி வாயிக்கு வா சொல்லும். 'பேசாமெ ஒன்வேலையைப் பாத்துக்கிட்டுப்போ' ன்னு அதட்டிப்புடுவா. 'கொழுந்தை வேதனையின்பேரிலே சொல்லுது'ன்னு அந்த அம்மா மனசுக்குள்ளே எண்ணி எண்ணி மங்கிபோனுங்க".

"ஆமாம், எனக்குத் தெரிஞ்ச வரையிலே ரங்கசாமி தொழிலுக்குத் தகுந்த நடத்தை என்னு இல்லாமே ஒழுங்காத் தான் இருந்துண்டிருந்தான். அப்படியிருக்கச்சே என் இப்படி மனஸ்தாபமோ?"

"என்னத்தைச் சொல்லறது அய்யா. தலைவிதிதான், அவ கொறளித்தனந்தான். ஆம்புள்ளெ வீட்டுக்கு வந்தபோதெல்லாம் சதா காஞ்சா அவனுக்கு அலுத்துத்தானே போவும். 'ஊட்டுக்குத்தொலைவானே'ன்னுட்டு முடிஞ்சவரையிலே வெளியிலியே காலந்தள்ள ஆரம்பிச்சுட்டாரு. இவளுக்கு அதுலேருந்து சந்தேகமும் ஆத்தாமும் இன்னும் சாஸ்தியாப் போச்சு. பாட்டுக்காரங்களைக் கண்டா அருயெப்படாரத்திலேருந்து பாட்டுலேயே வெறுப்பாப் போச்சு.

அவரொரு பாட்டுப்பாடிக் கேக்கணும்னு ஆயிரம் பேர் காத்துக்கிட்டுக் கடப்பாங்க. அவர் வூட்டிலே தனியாயிருக்கறப்போ மெதுவாத் தனக்குள்ளறப் பாடிக்கிட்டிருந்தாக் கூட அவ கிர்ருனு எழுந்து வெளியேபூடுவா. அவர் ஆட்டத்தைப்பார்க்கப் பத்துமைல் எட்டுமைல்லேருந்து சனங்க வரும்—இதோ வந்திருக்கே—அவளோ ஆட்டம் நடக்கர எடத்துப் பக்கமே திரும்பிப் பாத்ததில்லே. நாங்க யாராவது, 'வள்ளி, ஒங்க வூட்டுக்காரரு சந்திரமதி போடறாராம் வெள்ளப்பாடி யாட்டத்தில்லே. ரொம்ப விமரிசையாயிருக்குங்களுங்களே பாத்தவங்க எல்லாம், நீ பாக்க வாண்டாமா?' ன்னு, ஒரு கோணச் சிரிப்புச் சிரிச்சுக்கிட்டு 'நீங்கள்ளாம் அவர் ஆட்டத்தை என்னிக்காவது ஒரு நாள்னு பாக்கிறீங்க, நாந்தான் தினம் பாத்துக்கிட்டிருக்கேனே?'ன்னு விகல்பமாச் சொல்லுவா. கண்ணாலம் ஆன புதிசிலே அவரும் எவ்வளவோ ஆசையா அவ தன் வித்தையைக் கண்டு களிக்கணும்னு கூப்பிடுவாரு. 'எனக்கென்ன வேலை அங்கே, ஒங்க கூத்தாடிச்சிங்க பாத்துக் கை கொட்டறாளுவளே, அது போதாதா?'ன்னு அலக்ஷியமாச் சொல்லுவான்னு அவ கொழுந்தனு சொல்லும். அப்பறம் அப்பறம் அவரு கூப்படறத்தயே நிறுத்திப்புட்டாரு. ஆட்டம் பாட்டுங்கற பேச்சையே எடுக்கறதில்லெ. சோத்து வேளைக்கு வூட்டுக்கு வாரத்தோடெசரி. அவ எப்போ பாத்தாலும் கண்ணுங் கண்ணீருந்தான். ஆனா அதுக்காகப் படிஞ்சுபோறதாங்கரசேதி அவகிட்ட இல்லெ"

“இருந்தாலும் அவன் பண்ணினதும் அக்ரமந்தானே! என்ன வெள்ளம் தலைக்கி மேலேபோனாலும் க்ரியாம்சையிலே தவறலாமா? விட்டிலெ கட்டின பொண்டாட்டி இருக்கறத்தே, வயசாகி லோகத்திலே அடிபட்டவன் யாரோ ஒரு தட்டுக்கிட்ட கழுதை ஆப்புட்டுதுன்னு ஓடிடுறதா? உடம்பிலே தெம்பு கொறஞ்சு கீழே படுத்திண்டான்னா அவளா வந்து செய்வா? ஆப்பட்டத்தெச் சுருட்டிக்கிண்டு 'எங்க அண்ணனைக் கண்டியோ'ன்னு கம்பிநீட்டிட மாட்டாளா? நல்ல வேளையாப் போச்சு. செத்தாளோ, அவன் பொழைச்சானே!” என்று கிருஷ்ணய்யர் தனக்குத் தோன்றின தர்ம நியாயத்தை எடுத்துப் பேசினர்.

இதற்குள் நன்றாய் இருட்டிவிட்டது. ஆட்ட மேடைக்குச் சமீபத்தில் ஒரு **வாஷிங்டன் லைட்** கொளுத்தப்பட்டது. 'கியாஸ்' ஸரியாய் எருததால் குபீலென்று சுடல் கிளம்புவதும் அடுத்த நிமிஷம் மங்குவதும், 'சோ' என்று சத்தம் போடுவதிலேயே அதன் திறமையைக் காட்டுவதுமாய்க் கூடியிருந்த ஜனங்களுக்கு வெளிச்சம் அதிகமாய்க் கொடுக்காமற்போனாலும் விநோதத்தை உண்டுபண்ணிக் கொண்டிருந்தது. நிக்காலுக் கொன்றாகக் காடா விளக்குகள் புகைந்து கொண்டிருந்தன. மேடைக்கெதிரே போட்டிருந்த விரிப்புப் பாயில் பிடில், மிருதங்கம், ஹார்மோனியம் வாசிப்பவர்கள் வந்து அமர்ந்தார்கள். விதூஷகன் வேஷம் போடுபவன்—அவன் மூஞ்சி முன் பக்கத்தில் மட்டும் அரிதாரம் பூசினதிலிருந்து அது தெரிய வந்தது — வெகு மும்முறமாய் மேடையில் உள்ளேயும் வெளியேயும் போய்க்கொண்டு சிப்பந்திகளை அனுவசியமாய் 'இதைத்தூக்கி அங்கேபோடு' 'அதைத்தூக்கி இங்கே போடு' என்று அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்தான். அவனையும் அவன் சேஷ்டைகளையும் கண்ட குழந்தைகள்—அதாவது தூங்காமலிருந்தவர்கள்—ஆட்டம் ஆரம்பித்து விட்டதாகவே எண்ணிக் குதூகலித்துக் கைகொட்ட ஆரம்பித்துவிட்டார்கள். அதற்கேற்றுப்போல் பிடில்காரன் சுருதி பண்ணுவதும், மிருதங்கக்காரன் அதற்கொத்துமையாய்ச் சாப்புக் கொடுப்பதும், ஜனங்களைக் கூட்டுவதற்காகப் பெரிய கோவில்தாளத்தைக் கையிலேந்திய ஒரு பயல் சவுக்க காலத்தில் அதை ஊக்கத்தோடு தட்டச் சமீபத்திலுட்கார்ந்தவர்கள் இடியிடித்தாற்போல் தூக்கிப்போடப்படுவதுமாய்

இவ்விதம் ஆட்டத்திற்கு மேளங் கட்டியாய் விட்டது. இப்பொழுது எந்த நிமிஷமும் அஸல் ராஜபார்ட்டு மேடை யேறலாமென்று எதிர்பார்த்து நிற்கும் ஜனங்களிடையே அரவம் சற்று அடங்கிற்று.

அதற்கநுகுணமாகத் தனக்குள் பேசிக்கொள்ளுபவள்போலக் கிருஷ்ணய்யர் சொன்ன வார்த்தைகளைத் தொடர்ந்து அந்த ஸ்த்ரீ பேச ஆரம்பித்தாள். "அவ பாக்கியவதி அய்யா. சொல்ப வாழ்வுன்னும் ராசாத்தியாட்டமா இருந்துட்டுப் போயிட்டா. என்ன சாதியாயிருந்தா என்ன, என்ன பண்ணின என்ன, ஒரு ஆம்புள்ளெ—அதுவும் எப்பேர்ப்பட்ட ஆம்புள்ளெ—எல்லாத்தையும் தொறந்து எல்லாத்தையும் மறந்து அவகிறின கோட்டுக்குத் தாண்டறதில்லே, அவ உண்டான உண்டு இல்லாட்டி ஒலகமே அஸ்தமனம்னு இருக்கக்குடுத்துவைச்சாளே, அவன்னு புண்ணியவதி! எதோ அல்பாயுசு, போயிட்டா. செத்துப்போயிட்டாளேயொளிய அவருமனசிலே செத்துப்போயிட்டாளா? எனக்குத்தோணலே. அது அவபண்ணின பூசை" என்றாள்.

இதைக் கேட்டதும் கிருஷ்ணய்யர் சற்று ஆவலாய், "ஆமாம், அப்படி அவனே மயக்கறத்துக்கு அவகிட்ட என்ன வெசையிருந்தது? அழகுன்னு எத்தனையோ பேர் இன்னும் அழகாயிருக்கா. பாட்டுக் கூத்து கேளிக்கைன்னு ரங்கசாமிக்கு அவளெவிட அதிலெல்லாம் ஸாமர்த்தியமுள்ளவா அடிமையாக் கிடந்திருக்கா. இது ஒரு அதிசயந்தான்," என்றார்.

"அதிசியம் ஒண்ணுமில்லீங்க. நான் பாத்ததில்லெ அவளெ. ஆனா, நம்ம ஒற மொறெ சனம் கொளும்புலே, யாழ்ப்பாணத்திலே, பினுங்குலேல்லாம் இருக்கு. அதுக இவரோடெ சேர்ந்து அவ ஆடறதும் அந்தந்த ஊர்லெ தங்கரபோது குடித்தனம் பண்ணறதும் பாத்திருக்கு. அந்தக்காலத்திலேஇவரை—அதான், ஆட்டக்காரரெ—அறிமுகமுள்ளவங்க கண்டபோதெல்லாம் எதோ லாகிரியுண்டவராட்டம் அவரு இருந்தாரேயொளிய சாமாந்நியமா எப்போதும் பழக்கமுள்ள ஆளாட்டம் இல்லேன்னு ஒருமொகமாச் சொல்லிக்கிட்டாங்க. எதோ காணாத்தெக் கண்டவர் போலத்தான் இருப்பாராம். அது போலெ அவளும் ஆயிரம் பேரிருந்தாலும் அவரெப் பாத்தபடிதான். பாக்கிப்பேர் கண்ணிலியே படல்லெப் போலெத் தோணுமாம். அவ ஆட்டத்திலேயே அதுதான் சனங்களுக்கு ப்ரமம். மேடைலே அவரோடெ ஏறிப்புட்டாளுன்னு ஒலகமே மறந்து தாங்க ரெண்டு பேரும் எங்கேயோ சொர்க்கத்திலே யிருக்கிறுப்பிலேதான் நடப்பாளாம். அதெப்பாத்தா ஆட்டமுன்னு சொல்லறத்துக்கில்லெ. தன் வீட்டுக்குள்ளற ஆணும் பொண்ணும் ஒத்து வாழுறுப்போலேயே யிருக்குமாம். அது ஒரு தனி இன்பம்தானே!" என்று சொல்லும்போது அவள் கண்களில் இரண்டு நீர்த்துளிகள் பளிச்சென்று கிளம்பினைப்போல் அந்த மங்கல் வெளிச்சத்தில் குஞ்சிதத்தின் கூர்மையான பார்வைக்குப்பட அவன் திடுக்கிட்டான்.

(தொடரும்)



# தவறுதலும் தண்டனையும்

"பௌராணிகன்"

"தவறுதல் சகஜம். தண்டிக்கப்படுவதும் சகஜம். இவைகளின் தத்துவம் ஆராய்ச்சிக் குறித்தானது" என்று தனக்குத்தானே ஆறுமுக நாயக்கர் சிறுலூர் இலுப்பைத் தோப்பின் மத்தியில் மரத்தினடியில் உட்கார்ந்து சொல்லிக்கொண்டிருந்தார். அச்சமயம் பரஞ்சோதிப் பிள்ளையும் அங்கு வந்து சேர்ந்தார்.

"பிள்ளைவாள்! சரியான சமயத்தில் வந்தீர். அன்றைக்குத் தப்பிதம் திருத்தப் படக்கூடாதா என்று கேட்டீரல்லவா? நான் என்ன சொன்னேன்?"

**பரஞ்:** ஆம், கூடும் என்றீர். தவறுதலும் தண்டனையும் என்ற விஷயமாக ஆலோசிக்கலாமென்றும் சொன்னீர்.

**ஆறு:** அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். தவறுதல் என்பது என்னவென்று யோசித்தீரா?

**பரஞ்:** யோசிப்பதெதற்கு? செய்கிற தப்பிதமெல்லாம் தவறுதல்கள்தான். கொலை, களவு, பொய் சொல்லுதல், பேராசைப்படுதல், அவநம்பிக்கை கொள்ளுதல், நம்பிக்கை த்ரோகம் செய்தல், பிறர் சொத்தைப் பறித்துக்கொள்ளுவது முதலிய பல விஷயங்களும் தவறுதல்களே. தாங்கள் விளக்கியபடி இவை யாவும் பெருங் குற்றமாகிய சோம்பலை அடிப்படையாகக் கொண்டு விளைபவை.

**ஆறு:** ஆம். பிள்ளைவாள் சரியாகத் தான் சொல்லுகிறீர். இன்னும் சிறிது தத்துவ ஆராய்ச்சி செய்து பார்த்தால் இவைகளெல்லாம் தவறுதலினுத்பாதங்கள் அல்லது விளைவு. தவறுதல் என்பது லக்ஷ்யத்தினின்றும் நழுவுகிறது. நழுவியதன்பலனாக மேற்சொன்ன குற்றங்கள் எல்லாம் உண்டாகின்றன. அல்லது இப்படி நழுவக் காரணமாகிய சோம்பலின் விளைவு இக்குற்றங்கள். இக்குற்றங்களை யழித்தால் சோம்பலும் அழிவுறும். சோம்பலை யகற்றினாலும் இக்குற்றங்கள் நிகழா.

**பரஞ்:** அதை எவ்வாறு கட்டுப்படுத்துவது? எவ்விதம் சோம்பலழிக்கப் படும்? தற்காலம் அரசாங்கம் இதற்காகப் பாடுபடவில்லையா?

**ஆறு:** அதைத்தான் விவரிக்கிறேன். கேளும். அரசாங்கம் குற்றங்களைக் கண்டுபிடித்து அடக்க, போலீஸ், நியாய சபை முதலியவைகளை ஏற்படுத்திப் புதிது புதிதாக ஏற்படும் தவறுதல்களுக்குப் பரிகாரம் செய்யும் அதிகாரத்தைக் கொடுக்கச் சட்டசபைகள் முதலியவைகளையும் ஏற்படுத்தி இருக்கிறது. ஆனால் ஆதியில் ஏற்பட்ட பெரும் தவறைத் திருத்த வழிசெய்ய முடியவில்லை. இது ஞானம் ஏற்பட்டாலொழிய சித்தி பெறக்கூடிய காரியமில்லை.

**பரஞ்:** ஆனால் அரசாங்கத்திற்கு அத்தகைய ஞானமேற்படவில்லையா?

**ஆறு:** ஏற்படவில்லை என்றோ, ஏற்படாதென்றோ சொல்லத் தேவையில்லை. காரியத்தில் பலன்தரவில்லை.

**பரஞ்:** எவ்வாறு?

**ஆறு:** எந்தக் குற்றத்திற்காகத் தண்டனை கொடுத்தாலும் தற்சமயத்திற்கு அக்குற்றவாளி சிறிது கஷ்டத்தை யடைகிறானேயொழிய அவன் மனதில் தான் செய்தது பிழை என்ற எண்ணம் ஏற்படுவதில்லை. திருடுகிறவனுக்குக் கடுங்காவல் தண்டனை விதித்தால் அவன் தண்டனை முடிந்ததும் என்ன யோசனை செய்கிறான்? அல்லது தண்டனையை யனுபவிக்கையில் என்ன யோசனை செய்கிறான்?

**பரஞ்:** தான் தப்பிதம் செய்ததினால் தண்டனையடைந்தோம். ஆகவே இனிமேல் தப்பிதம் செய்யக்கூடாது என்று எண்ணுகிறான்.

**ஆறு:** அப்படி என்றால் தண்டனையினின்றும் தப்புவதற்காக தப்பிதம் செய்யக் கூடாதென்று தீர்மானிக்கிறான்

அல்லவா? தண்டனையின் கொடூரத்தைத் தாங்கச் சக்தி யில்லாததினால் பயமடைந்து தப்புவதற்காகத் திருடாமலிருக்கிறான்.) அல்லது அகப்பட்டுக் கொள்ளாமல் திருடுவதெப்படி என்று யோசிக்கிறான்.

**பரஞ்**: ஆம். அப்படியேதான் வைத்துக் கொள்ளுங்களேன். அதற்காக எவ்விதம் அவனைத் தண்டிக்கச் சொல்லுகிறீர்?

**ஆறு**: அதையும்தான் இவ்வளவு காலமும் யோசித்து வருகிறேன். சத்ய யுகத்தையடையப் பாடுபடுபவர்களுக்கு வேண்டிய ஒரே மார்க்கம் புலப்படுகிறது. ஆனால் இக்காலத்தில் ஒப்புக் கொள்ளும்படியான நம்பிக்கையும் வைராக்கியத்துடன் கூடிய தைரியமும் ஜனங்களுக்கிருக்குமா என்றுதான்சிறிது தயங்குகிறேன்.

**பரஞ்**: தயக்கமேதற்கு? நீரேதான் சொல்லுவீரே, "மனத்தில் தூய்மையான எண்ணங்களுடன் சங்கல்பங்கள் செய்து ஆராய்ச்சியைச் செய்ய வேண்டும். மீதி அவன் விட்ட வழி" என்று. இப்பொழுது உடனே இச் சனங்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று யோசிக்கவேண்டாம். சத்தியத்தில் ஆசையும், நேர்மையில் நம்பிக்கையும், உழைப்பில் விருப்பும் ஆத்ம வஞ்சனையுள்பட வஞ்சிப்பது சிறிதுகூட கலையாகாதென்ற தெளிவும் ஏற்படும்பொழுது, தானே இவ்வுலகம் ஏற்றுக் கொள்ளும். ஆகவே விவரியும் உம்முடைய சித்தாந்தத்தை.

**ஆறு**: திருடன் முதல் மற்றும் பல குற்றவாளிகளையும் தண்டிப்பதெப்படி என்று கேட்கிறீர். நடைமுறையில் இருக்கும் தண்டனை பயன்படாதா என்றும் ஓர் கேள்வி பிறக்கிறது. இதன் நுட்பத்தை ஆராய்வோம். கவனமாகக் கேளும். தண்டனைஎன்பது நியாயாதிபதி மனதிற்கிஷ்டப்படிக் கட்டளை இடும் விஷயமில்லை. நிஷ்பக்ஷபாதமாக வாத ப்ரதிவாதங்களைக் கேட்டும் சாக்ஷிகளை விசாரித்தும் குற்றம் வாஸ்தவத்தில்நிகழ்ந்ததா வென்றும், அப்படியானால் குற்றம் சாட்டப்பட்டவன் உண்மையில் குற்றவாளிதானா வென்றும் கண்டு பிடித்து சட்ட ப்ரகாரம் யுக்தமான தண்டனையைக் கொடுப்பது என்பது எல்லோரும் ஒப்புக் கொண்டுள்ள சம்பிரதாயம். நடைமுறையிலிருக்கும் சட்டம் நியாயமானதா என்று தீர்மானிக்க நியாயாதிபதிக்கு அதிகாரமில்லை. அது சட்டங்கள் செய்பவரின் அதிகாரம். ஆகையினால் நமது ஆராய்ச்சி 'எவ்வாறு சட்டம் அமைந்திருக்க வேண்டும்' என்பதைக் குறித்தது. இது அறிவாளிகளின் ஒத்துழைப்பினால் அரசாங்கம் ஏற்படுத்துவது. இவ்வறிவாளிகளும் யோசனை செய்து பார்க்க மேலும் மேலும் சந்தர்ப்பங்கள் கொடுத்துக்கொண்டே இருந்தால் சத்தியத்தின் சார்பில்தான் எல்லோரும் சேர்வார்கள் என்பதற்காக்ஷேபணை இல்லை. ஆகவே அறிவாளிகள் யோசித்துப் பார்க்கட்டும் என்று நாம் ஆராய்ச்சிகளை விளக்கவேண்டும். அவ்விதமே செய்வோம்.

இப்பொழுது உதாரணமாக திருடன் விசாரிக்கப்படுவதையே யோசிப்போம். திருட்டுக் குற்றம் ருசுவாகி விடுகிறது. குற்றவாளி திருடன்தான் என்றும் தீர்மானமாகிறது. இப்பொழுது தண்டனைதான் பாக்கி என்ற கட்டம். ஆனாலிதற்குள் விசாரித்திருக்க வேண்டிய விஷயம் என்னவென்று சொல்லுகிறேன். நியாய மன்றத்தில் விசாரித்து அறிய வேண்டியது இத் திருடனின் குடும்ப விருத்தாந்தங்கள். எவ்விதக் கடமைகள் அவன் தலையில் சுமத்தப்பட்டிருக்கின்றன, இவைகளைச் சரிவர செய்துமுடிக்க திரவ்யாதிகளில் அவனுக்கு ஏற்பட்ட சௌகரியக் குறைவு, வேறு வழிகளில் இலாபகரமாகச் சம்பாதிக்க முடிந்திருந்தால் திருட எண்ணம் பிறக்காது. ஆகவே அவன் புத்திக்கெட்டிய வரையிலும் திருடுவதுதான் உடனே லாபம் பயக்கக் கூடிய மார்க்கமென்று ஏற்பட்டது. அகப்பட்டுக் கொண்டால் தண்டனையடைவது வாஸ்தவம். ஆனால் பல

தடவைகள் 'அகப்பட்டுக் கொள்ள மாட்டோம்' என்ற அசட்டுத் தைரியம். ஏனென்றால் அவனுக்குத் தெரிந்து பல பேர்கள் உடனுக்குடனே அகபட்டுக் கொண்டதில்லை. அப்படியே அகப் பட்டுக் கொண்டாலும் தண்டனை மிக்க ப்ரமாதமாக இருக்காது என்கிற குருட்டு நம்பிக்கை. இவ்வளவு விஷயங்களும் அவன் மனதில்பதியுமாறு அவன் வாக்கு மூலம் வாயிலாகவும் குறுக்கு விசாரணைகள் மூலமும் இந்த ஒரு முறை மன்னிப்பும் யோக்யமாக வாழ்க்கையைத்துவங்க சந்தர்ப்ப சௌகரியங்களும் கிடைத்தால் எவ்வளவோ மேன்மையாக வாழ்க்கை நடத்தி விடுவோம் என்ற ஓர் பச்சாத் தாபமும் அவன் மனதில் ஊற்றுப்போல் சுரக்க உதவவேண்டும் குற்றவிசாரணை. இவ்வித சலசலப்பு மனதில் ஏற்படுகையிலேயே குற்றவாளிக்கு அபயப்ரதானம் கொடுப்பதே போல் தண்டனை எத்தன்மையது என்பது நியாயாதிபதியினால் கோடி காட்டப்படவேண்டும். குற்றவாளியின் மனதில் "நியாயாதிபதியும் ஏனையோர்களும் தன்னிடம் அன்பும் ஆதரவும் உடயவர்களாகவிருக்கிறார்கள். அவர்களுடைய தண்டனை தனக்குச் சகாயம் செய்யக்கூடிய விஷயமே யொழிய அவமானத்தையோ ஆத்ம சங் கடத்தையோ பயப்பதாக இருக்காது. இத்தண்டனையின் மூலம் மறுபடியும் சமூகத்தில் ஓர் யோக்யமான மனிதனாக வாழச் சந்தர்ப்பம் கிட்டும். நம் லக்ஷயத்தைத் திருப்பியடைய வழிபிறக்கும். எக் காரணத்தைக் கொண்டும் இத்தண்டனை கிட்டாமல் போகக்கூடாது" என்று பலமான நம்பிக்கையும் ஆசையும் உண்டாக வேண்டும்.

**பரஞ்:** இப்படி எத்தனை குற்றவாளிகளை விசாரிக்க முடியும்? இவ்விதம் ஆரம்பித்துவிட்டால் ஒவ்வொருவரும் தைரியமாகக் குற்றம் செய்யத் தொடங்கிவிட மாட்டார்களா?

**ஆரி:** இது பிரமையினால் ஏற்படும் சந்தேகம். குற்றவாளிகள் சீக்கிரம் விசாரிக்கப்பட்டுச் சட்டுப் புட்டென்று தண்டிக்கப்பட வேண்டும் என்பது லக்ஷியமில்லை. சரியாக விசாரிக்கப்பட்டு சரியாக தண்டிக்கப்படவேண்டும் என்பதே லக்ஷ்யம். சரியான மார்க்கத்தைச் சொன்னேன். அதிக வேலை ஏற்பட்டால் அதிக பேர்களைக்கொண்டு வேலையை முடிக்க வேண்டுமே யொழிய அதற்காக வேலையைத் தாறுமாறாகச் செய்து விடமுடியாது. ஒரு விதத்தில் பார்த்தால் எல்லோரும் குற்ற மிழைக்கையில் ஒரு விதமான வியாதியினால் பீடிக்கப்பட்டவர்களே. இதை மனோ வியாதி என்றோ தேகவியாதி என்றோ சமயோசிதமாகத் தீர்மானம் செய்துகொள்ளுங்கள். இவ்விதம் பலர் வியாதியுற்றால் இவர்களை குணப்படுத்த மேலும் மேலும் தகுந்த சிகிச்சகர்களும் ஔடதங்களும் வேண்டுமென்றால் இவ்வளவு பேர்களுக்கும் வைத்தியம் சரியான முறையில் செய்யச் சாத்தியப்படாது என்று சொன்னால் புத்திசாலித்தனமான வார்த்தையா? சீக்கிரம் முடிக்கவேண்டுமென்பதற்காக கொலை செய்துவிடுவதா? அல்லது சம்பந்தா சம்பந்தமில்லாத மருந்துகளை எல்லாம் கொடுத்துவிடுவதா? அதே போல்தான் மனோ வியாதியஸ்தர்களாகிய குற்றவாளிகளையும் நினைத்தபடி தண்டிப்பதினால் நடைபிணமாக்கி விடுவோம். இதே உதாரணம் உங்களுடைய இரண்டாவது கேள்விக்கும் பதில் சொல்லும். எல்லோரும் நல்ல வைத்தியம் கிடைக்கும் என்பதற்காக வியாதியை வரவழைத்துக்கொள்ள விரும்புவதில்லை. அதே மாதிரி தண்டனையின் தன்மையை யறிந்து அதற்காக அதிக பேர்கள் குற்றம்செய்யத் தொடங்குவர்களென்பதும் வீண் பிராந்தியே.

**பரஞ்:** ஆம். நீர் சொல்வதில் ஆழ்ந்த உண்மைகளிருக்கின்றன.

**ஆரி:** ஆகவே இத்திருடனை தண்டிக்கும் விதம் கூறுகிறேன் கேளும். நியாயாதிபதி இத்திருடனின் கஷ்ட நிஷ்டூரங்களை யறிந்து தண்டிக்க விரும்பினால் அரசாங்க உத்தியோகஸ்தர்களிடம் ஒப்புவித்து "இந்தவிதமான வேலைகளுக்கு இவன் சமர்த்தன். இவனுக்கு இவ்வித வேலைகளைக் கொடுங்கள். இதன்

ஊதியத்தை இவனடையும்படி செய்யுங்கள். இவனது பெண்டுபிள்ளைகள் இவனுடன் சேர்ந்து வாழ வசதிகளேற்படுத்தி கொடுங்கள். இவன் திருடிய பொருளை பொருள்காரரிடம் சேர்ப்பியுங்கள். பொருள் நஷ்டமடைந்திருந்தால் இவன் ஊதியத்திலிருந்து ஈடுசெய்யுங்கள் சிறுக சிறுக" என்று சாங்கோபாங்கமாக உத்தரவிட வேண்டும். இவ்வுத்தரவை நிறைவேற்றிவைக்க சாதனங்களுடன் கூடிய இலாகா ஒன்றும் ஓர் பொறுப்பு வாய்ந்த அமைச்சரும் வேண்டும். இவ்விதம் செய்தால் திருடனும் சந்தோஷத்துடனும் நன்றியுடனும் தண்டனையை ஏற்றுக் கொள்ளுவான். எவ்வளவு காலம் இவ்விதம் அரசாங்க பாதுகாப்பில் இருக்க விருப்பமோ அவ்வளவு காலம் இருக்கட்டும். தன்னம்பிக்கையும் மனத் தெளிவும் ஏற்பட்ட பொழுது வெளியேறட்டும். சமூகமும் இவனைக் கொண்டாடும். நிச்சயமாக 'தன்னம்பிக்கையும் தெளிவும் உள்ள ஆள். நம்பி காரியங்களை யொப்புவிக்கலாம்' என்ற தைரியம் ஜனங்களுக்கேற்படும்.

**பரஞ்:** வாஸ்தவம் தான். இவ்வித ஆலோசனைக்கு அடிப்படை தத்துவம் யாதோ?

**ஆறு:** அதைத்தான் விளக்கவந்தேன். தவறுதல் என்பது லக்ஷ்யத்தினின்றும் நழுவுகிறது. தண்டனை என்பது லக்ஷ்யத்தை திரும்பி கடைப்பிடிக்கும்படி உதவுகிறது. ஆகவே குற்றமிழைக்கும் ஒவ்வொருவனும் லக்ஷ்யத்திலிருந்து சறுக்குகிறான். அவன் திரும்பி தன் நிலையை யடைய மற்றவர்களின் சகாயத்தை எதிர்பார்க்கிறான். தண்டனையாகிற இச்சகாயம் கிட்டாவிடில் ஏக்கமுறுவான். ஆகவே சீக்கிரத்தில் செல்லுங்கள் அவனுதவிக்கு என்று சொல்லுகிறேன். மறுபடியும் அவன் இருந்த நிலையை அடையச் செல்லும் மார்க்கம் கரடு முரடாகவும் இருக்கலாம், செப்பனிட்டதாகவும் இருக்கலாம். அது சமய சந்தர்ப்பங்களைப் பொறுத்தது. ஆகவே தண்டிக்கிறவன் அன்பினால் தண்டிக்கிறான். குற்றவாளியிடம் வாத்ஸல்யம் ஏற்படாவிட்டால் சரியாகத் தண்டிக்க மாட்டான். அன்பினால் கனிந்தது நல்ல தண்டனை.

**பரஞ்:** பெரிய உண்மை. இவ்விதமே சமூகத்தில் இருக்கும் மற்றைய காரிய கிரமங்களையும் விளக்கினால் மிக்கப் பயனேற்படும் என்று நம்புகிறேன்.

**ஆறு:** நல்லது. காரியக் கிரமங்கள் நடைபெறும் விதம் எப்படி **சத்திய யுகத்தில்** என்பதுபற்றி அடுத்தபடியாக யோசிப்போம்.

---

ஆண்கள் விருட்சங்கள்; பெண்கள் அந்த விருட்சங்களைத் தழுவியிருக்கும் கொடிகள்; குழந்தைகள் அந்தக் கொடியில் மலரும் மலர்கள்.

குழந்தைகள் சுதந்திரமாயிருக்கட்டும். அவர்களிடம் நியாயமாகவும் நாணயமாகவும் நீங்கள் நடந்துகொள்ளுங்கள். அவர்களிடம் இனிமையாக நடந்து கொள்ளுங்கள். அவர்கள் உங்களுடைய அன்பையும் சந்தோஷத்தையும் அதிகப் படுத்துவார்கள்.

குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுங்கள்; அவர்கள் உங்கள் வழிக்கு வருவார்கள். நீங்கள் செய்கிறமாதிரியே அவர்களும் செய்வார்கள். ஆனால், இன்னதைத்தான் செய்யவேண்டுமென்று வற்புறுத்துவீர்களானால் மானிட ஹிருதயத்தில் குடிகொண்டிருக்கும் ஏதோ ஓர் அபார சக்தி, பிறரால் ஏவப்படுவதை எதிர்த்து நிற்குமாறு செய்கிறது. இந்தச்சக்தி மனிதர்களுக்கு இருக்கிறதென்பது, உலகத்திலேயே மிகவும் அதிர்ஷ்டம் வாய்த்ததாகும்.

—"மானிட சாதியின் சுதந்திரம்" (சக்தி மலர்)

## மங்கம்மா சபதம்
### (ஜெமினி தயாரிப்பு)

கதை ஒரு புராதன நாடோடிக் கதைதான். இருந்தாலும் ஒரு சிறந்த கற்பனைச் சித்திரம். 'மங்கம்மா சபதம்' விக்ரமாதித்யன் கதையில் வரும் ஒரு கிளைக்கதை யென்றும் மதன காம ராஜனில் வரும் ஒரு குட்டிக்கதை யென்றும் இப்பொழுது பத்திரிகை உலகில் ஒரு தீவிர தர்க்கம் நடந்துவருகிறது. எக் கதையில் வந்தால் என்ன? அச் சிறந்த கற்பனையைக்கொண்டு மேலும் சில கற்பனை சம்பவங்களைப் புகுத்திப் படம் எடுத்திருப்பது நமக்குப் பார்க்க நன்றாக இருக்கிறதா என்பதுதான் கேள்வி. சுருங்கச் சொல்லின் அதைச் சந்தேகமின்றி உயர்ந்த படம் என்று கூறிவிடலாம்.

முதலாவதாக அது ஜெமினியின் தயாரிப்பு. சிறந்த நவீனச் சாதனங்களோடு கூடியது ஜெமினி ஸ்டுடியோ. செட்டிங்ஸ் சொல்ல வேண்டியதில்லை. அபாரமாக இருக்கிறது. மிகுந்த பொருட் செலவில் கவனம் செலுத்தி அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கட்டமும். ஒலிப்பதிவும், ஒளிப்பதிவும் பிற தமிழ்ப் படங்களைத் தூக்கியடிக்கின்றன. சிற்சில இடங்களில் உயர்தர மேல்நாட்டுப் படங்களையும், வடநாட்டுப் படங்களையும் போலத்தான்!

இவ்வளவு கூறிவிட்டு நடிகர்களைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியுமா? ரிஷ்யசிருங்கரில் நடித்த அதே ஜோடிதான். வசுந்தரா—ரஞ்சன்! இருவர்களும் நன்றாக நடித்திருக்கின்றனர். இருந்தாலும் ஸ்ரீ ரஞ்சன் தனது நடிப்பில் இன்னும் சிறிது கவனம் செலுத்தி இருப்பாரானால் மிகத் தரமாக இருக்கும். கடைசிக் கட்டத்தில் வசுந்தராதேவி 'மேக் அப்' அவ்வளவு பொருத்தமாக இல்லை. சினிமா உலகின் விகடராஜன் என். எஸ். கிருஷ்ணனும், டி. ஏ. மதுரமும் நன்கு நடித்திருக்கின்றனர். மற்ற நடிகர்களும் தங்கள் பாகத்தை திறமையுடன் நடித்திருக்கிறார்கள்.

மொத்தத்தில் 'மங்கம்மா சபதம்' மிக்கத் திருப்திகரமான படம். எல்லோரும் அதை அவசியம் பார்க்கவேண்டியதே. மேலும் ஜெமினியிலிருந்து இதைவிடச் சிறந்த படங்களை எதிர்பார்க்கிறோம்.

இப்படத்தில் வரும் ஆங்கில நடனம் பற்றி தர்க்கமிருந்தாலும், புதியதொன்றை தமிழ்ப் படத்தில் புகுத்தியதற்கும், எல்லோரும் ரஸிக்கும்படி அதைச் செய்ததற்கும் நாம் ஜெமினியைப் பாராட்டவேண்டியதுதான்.

—ஓவியம்


ஆரம்பக்ஷயம், ஆஸ்த்மா, இருமல், ஈளை தீர

**லிங்க்யூர்**

ஒரு மாத மருந்து ரூ. 5.

நாள்பட்ட வியாதிகளுக்கு

மகரத்வஜத்துடன் கலந்த

**லிங்க்யூர்**

ஒரு மாத மருந்து ரூ. 10.

**SOLE AGENTS:-**

The Indian Industrial Co. Ltd.
363. Esplanade, Madras.

**STOCKISTS:-**

MADRAS
The United L. I. Ms.
Usman Road, T'Nagar.

MAYAVARAM
The United L. I. Ms
The Premier Medical Hall.

TRICHY
The United L. I. Ms.
Andar St. Teppakulam.

Sri Venkatesa Provision Stores,
Kuttalam, Tanjore Dt.

குறிப்பு:— தயாரிக்கும் முறை பாரதமணி சித்திரை மாத இதழ் பக்கம் 116 பார்க்கவும்.

பொது ஜனங்களுக்கு லிவர் பிரதர்ஸ் கம்பெனியாரின் அறிக்கை நெ. 1

# அதிக விலை கொடுக்காதீர்கள்



# வீணாக்காதீர்கள்

தேவைக்குத் தகுந்தபடி சோப் உற்பத்தி செய்வதில் தற்சமயம் எங்களுக்கு சிறிது கஷ்டமுண்டாகி வருகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. சண்டைக்கு முன்பு அந்நிய தேசங்களிலிருந்து சோப் வந்துகொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது அந்நிய நாட்டு சோப் இந்தியாவுக்கு வரமுடியாது போகவே உங்களுடைய தேவைக்கு வேண்டிய சோப் இந்திய சாலைகளிலிருந்தே ஈடு செய்யவேண்டி இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக சோப் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் சண்டைக்கும் வேண்டி இருப்பதால், யுத்த ஸ்தாபனங்களின் தேவைக்குத் தகுந்தபடி சோப்பின் உற்பத்தியும் கட்டுப்படுத்தப் படுகிறது. இத்தனைக் கஷ்டங்களிருந்தாலும் உங்களுக்குப் பிரியமான சோப் இந்தியாவில் எந்தப் பட்டிணத்திலும் கிடைக்கும்.

## விலைகள்

சண்டை ஆரம்பமான பிறகு மூலப் பொருள்களின் விலை அதிகமாகி விட்டபடியால் அதற்குத் தகுந்தபடி சோப்பின் விலையும் அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. சோப் உற்பத்தியில் கொள்ளை லாபம் ஒன்றுமில்லை; உண்மையில் விலையை அதிகப்படுத்தாமலிருக்க எல்லாவித முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. ஸ்டாக் குறைவான சமயங்களில் கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகள் சிலர் தங்கள் இஷ்டம்போல் விலையை உயர்த்தினார்களென்று எங்களுக்குத் தகவல் கிடைத்தது. ஆனால் நியாயமான விலைகளை அடிக்கடி நாங்கள் விளம்பரப் படுத்துகிறபடியால், நீங்கள் சரியான விலைக்குமேல் கொடுக்கக்கூடாது. இவ்விதம் செய்வதால் எங்களுக்கு நீங்கள் உதவி செய்வதோடு, கொள்ளை லாபம் அடிப்பவனையும் தடுக்கலாம்.

## உலர்த்தி வையுங்கள்

சோப்பை வீணாக்கக் கூடாது. உபயோகிக்கும் பொழுது சோப்பை தண்ணீரிலேயே போட்டுவிடாதீர்கள். உபயோகிக்கும் நேரம் தவிர மற்ற காலங்கள் சோப்பை உலர்த்திவையுங்கள். சோப்பின் கடைசித் துண்டையும், கொஞ்சம் தண்ணீரில் நனைத்து புதிய கட்டியில் ஒட்டினால் அது ஒட்டிக்கொள்ளும். இந்தவிதமாக கொஞ்சங்கூட வீணாக்காமல் சோப்பை உபயோகிக்கலாம்.

## நாங்கள் வாக்களிக்கிறோம்

லிவர் பிரதர்ஸ் கம்பெனியார் கடைகளில் ஸ்டாக் இருக்கவும், கூடியவரை விலை குறைவாக இருக்கும்படியாகவும் ஏற்பாடு செய்யவும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இதுதான் நாங்கள் உங்களுக்குச் செய்யும் உபகாரம். சென்ற நாற்பது வருஷங்களாக இந்தியாவிற்கு இந்த ஊழியம் செய்வதில் எங்களுக்கு எவ்வளவோ பெருமை.

லிவர் பிரதர்ஸ் நல்ல சோப் உற்பத்தி செய்பவர்கள்

ஸன்லைட் • லைப்பாய் • லக்ஸ் டாய்லெட் • லக்ஸ் லைப்பாய் டாய்லெட் • விம் • மங்கி பிராண்டு

L.COM.31-172 TM

# இலக்கிய அரசியல்

ஸா, சேதுராமன்

[தலைப்பைக் கண்டு வியக்கவேண்டாம். தமிழ் மறுமலர்ச்சி இலக்கிய உலகம் இன்று எப்படி நிர்வகிக்கப்படுகிறதென்பதை ஓரளவு எடுத்துச் சொல்லி, அதனால் 'உடன்டியாக ஏதாவது நன்மைகள் வாசகர்களுக்குக் கிடைக்காதா' என்ற ஏக்கத்தோடு எழுதப்பட்ட சாமான்யக் கட்டுரை இது]

சிறு சிறு தொகுதிகளாக நான்கைந்து கூட்டங்கள். ஒவ்வொரு தொகுதியிலும் பத்துபேர்களுக்கு மேற்படாத எழுத்தாளர்கள். ஒரே இனத்தைச்சேர்ந்த எழுத்தாளர்கள், பரஸ்பரம் இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்துகொண்டே பேசியும் எழுதியும் காலம் கழிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். புது எழுத்துக்களையும், புது இலக்கியங்களையும் சிருஷ்டிப்பதில் முனைவதாக இல்லை, முன்னைவிட இப்போது எவ்வளவோ வசதிகள் இருந்துங்கூட.

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் பலருடைய இலக்கியங்களை நான் படித்திருக்கிறேன். சென்ற பதினைந்து வருஷங்களில் வெளியான புதுத்தமிழ் வசனத்தின் ஆரம்பம், வளர்ச்சி, இன்றுள்ள நிலைமை இவற்றை உணரக்கூடிய அளவுக்கு நான் 'மறுமலர்ச்சி இலக்கிய'ப் பரிச்சயம் உள்ளவன்என்ற முறையில் எழுதுகிறேன்.

**சிறு கதை:**— ஐந்து வருஷங்களுக்கு முன்பு இருந்த உன்னதமான நிலை என்ன? இப்போது ஏன் நாளுக்கு நாள் அது உயராமல், சப்பென்று சண்டித்தனம் செய்கிறது? முன்பு மிகவும் உயர்ந்த கற்பனை தோய்ந்த இலக்கியச் செல்வத்தை அள்ளி அள்ளி வீசியவர்களிடமிருந்து வரவர ஏன் நல்ல சரக்குகள் கிடைப்பதில்லை? ஊக்கக் குறைவா? ஆதரவுக் குறைவா? நிச்சயமாக இரண்டும் இருக்க முடியாதென்று நினைக்கிறேன். பின் வேறென்ன?

சிறு கதைகளுக்கு இருந்த மவுசு நாளுக்குநாள் குறைந்து வருகிறது. வறுமைக்கும் துன்பத்திற்கும் குறைவில்லாத இந்தியனிடம் உணர்ச்சி யூட்டக்கூடிய அநுபவங்களே கதைகளாக மலர்கின்றன. தமிழைப் பொறுத்தவரை, மட்டரசமான—அநேகமாக எல்லாக் கதைகளுமே அப்படித்தான் இருக்கின்றன—கற்பனையைவிட, உணர்ச்சிமிக்க அநுபவங்களையே சிறிது மிகைப்படுத்தி எழுதினால் நன்றாக இருக்கும். கற்பனையூற்று வற்றாத கனிகளை இப்போது காணமுடியவில்லை. ஆகவேதான் 'உயர்ந்த கற்பனை' உள்ள 'சிறு கதை இலக்கிய'த்துக்குக் கொஞ்சகாலம் சுக்ரதசை அடித்தது. இப்போது சனித்துக் கிடக்கிறது—அறுவடையான வயல்போல.

ஒருவிதத்தில் பார்த்தால் இலக்கியத்தையே பிரதான நோக்கமாகக்கொண்ட பத்திரிகைகளைக் குறைசொல்ல வேண்டியிருக்கிறது. அயர்ந்து தூங்கிவிழுந்துகொண்டிருக்கும் ஏழை எழுத்தாளர்களை—நாடறிந்த மறுமலர்ச்சி எழுத்தாளர் கூட்டத்தைத்தான் சொல்கிறேன்!—செல்வத்தில் புரளும் பத்திரிகைகள் வேலை வாங்கவேண்டும். காமா சோமா என்று உருப்படியில்லாத கதைகளையும் கதையின் கதைகளையும், புது மோஸ்தரில் 'ஸ்தல புராணங்களை'யும் கொடுப்பது போதாது. புதிய தமிழ் நவீனங்களை வெளியிட முன்வரவேண்டும். அந்நிய பாஷை நூல்கள் உயர்ந்தனவாக நூற்றுக்கணக்கில் எவ்வளவோதான் இருக்கின்றன; அவற்றைத் தனியே புத்தகங்களாக அச்சிடலாமே! தமிழ் எழுத்தாளர்களை நவீனங்கள் எழுத உத்சாகமூட்டி, தொடர்கதைகளையெல்லாம் 'பக்காத் தமிழ்' நவீனங்களாக்கவேண்டும்........ இது ஒரு பெரிய தொண்டு

என்பதைத் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளை நடத்துபவர்கள் உணரும்படி ஆண்டவன் செய்வாராக!

**புதுப்புஸ்தகங்கள்**:—பார்வைக்கு 'மொத்தை'யாக இருக்கவேண்டும் என்கிற எண்ணம் பிரசுரகர்த்தர்கள் எல்லோர் உள்ளத்திலும் துடிபாயிருக்கிறது போலும்! தற்காலத்தில், யுத்தத்தையும் காகித விலையையும் பாராட்டாமல், வெளியாகும் புஸ்தகங்கள் எல்லாம் அப்படி அமைந்துள்ளன.

சமீபத்தில் பிரபல பிரசுரகர்த்தர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். **'பல்க்'** போதாது. இரண்டு ரூபாய் கொடுத்து வாங்கமாட்டார்கள்! என்று சொன்னார் அவர். கனமாகத் தோற்றக்கூடிய பேப்பரில் அச்சுப்போட்டாவது விலையைக் கூடுதலாக வைக்கவேண்டுமென்ற மனோபாவம், புஸ்தக வியாபாரிகளுக்கும், தமிழுக்கும் ஆபத்து.

பின் புஸ்தகங்கள் எப்படித்தான் இருக்க வேண்டும்! விலைதான் எப்படி இருக்கவேண்டும்!........ நான் புஸ்தகம் அச்சுப்போட்டு விற்பவன் அல்ல; எனக்குக் கணக்குப் போட்டுப் பார்த்துச் சொல்லத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் கண்ணை மூடிக்கொண்டு சொல்வேன்: புஸ்தகங்களை 'மொத்தையாக'ச் செய்து 'மொத்தமாக' விலைவைப்பது விரும்பத் தக்கதல்ல!

உயர்ந்த காகிதத்தில் அச்சிடாததற்காக இலக்கியத்தின் சோபை குறைந்து போய்விடுமா? யுத்தம் முடியட்டுமே, காகிதம், பைண்டு இவற்றில் கவனம் செலுத்தலாம்!

மேனாட்டு நூல்கள் உயர்ந்த முறையில் வெளிவர, நமக்குக் கிடைக்கவே முடியாத, பல சௌகரியங்கள் அவர்களுக்கு உள்ளன. ஆகவே அவர்களுக்குச் சமமாக நாம் சாதாரண காலத்திலேயே போட்டிபோட இயலாது. ஏன், அப்படி ஆசைப்படக்கூட முடியாது. யுத்த சமயத்தில் சொல்லவே வேண்டியதில்லை!

பட்டுப்புடவை கட்டிக்கொண்டதனால் மாத்திரம் ஸ்திரீகளின் அந்தஸ்து ஏறிவிடாது! உயர்ந்த காகிதத்தில் அழகான பைண்டுடன் அச்சிட்டு விட்டால், அது சிரஞ்சீவி வரம்பெற்ற இலக்கியமாகிவிடுமா!

கிடைக்கக்கூடிய மலிவான காகிதத்தில் அச்சிட்டு, கூடியவரையில் குறைவான விலையை நிர்ணயிக்கப் புஸ்தக வியாபாரிகள் முன்வருவார்களா?

இவ்வளவு தூரம் எழுதுவேன் என்பது பேனாவைக் கையில் எடுத்தபோது எனக்குத் தெரியாது. எழுதியோ ஆகிவிட்டது—அதுவும் அடி நெஞ்சிலிருந்து உணர்ச்சி பொங்க. யாரையும் புண்படுத்தும் நோக்கமில்லை; கண்டிக்கும் எண்ணமுமில்லை. மனமுருகிச் சொன்ன யோசனைகளாகத் தமிழ் இலக்கிய சேவையில் ஈடுபட்டவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.



# துர்எண்ணங்களைப் போக்கடிப்பது எப்படி?


**சுவாமி சிவானந்தரின் அபிப்பிராயங்கள்**

(மொழி பெயர்ப்பு: கண்ணன்)


மனமே ஆத்ம சக்தி. அபார சக்தி வாய்ந்த பொருள்கள் நிறைந்த வித்தியாஸங்கள் பலவுள்ள இம்மாயப்பிரபஞ்சம், பிரும்மம் அல்லது பரம்பொருளால் வியாபிக்கப்பட்டிருப்பதும் அம்மனதினாலேயே.

ஸம்ஸ்காரங்கள் அல்லது எண்ணங்களின் சேர்க்கைதான் மனம். பழக்க வழக்கங்களின் கட்டுதான் அது. மனதின் உண்மை தத்வம் பூர்வஜன்மவாஸனையிலும், நல்ல விஷயங்களில் ஆசையிலும் அடங்கியுள்ளது. நான் யார் என்ற எண்ணமே மனமாகிய மரத்தின் விதை. இந்த விதையிலிருந்து கிளம்பும் முளைதான் புத்தி அல்லது ஞானம் எனப்படுவது. ஸங்கல்பம் அல்லது எண்ணங்கள்தான் இம் முளையிலிருந்து விரியும் கிளைகளாகின்றன. அதாவது ஸங்கல்பம் அல்லது எண்ணங்களாகிய கிளைகளுக்கு ஆதாரமாகவுள்ளது இம்முளைதான்.

மனம் ஸாத்விகமான பொருள்களாலானது. ஆகாரத்திலுள்ள 'ஸப்ட்லெஸ்ட்' பாகங்களால் ஏற்படுவது மனம் என்று "சாந்தோக்ய உபநிஷத்"தில் கூறப்பட்டிருக்கிறது.

மனம் அசுத்தம் அல்லது களங்கமுள்ளது, சுத்தம் அல்லது நிர்மலமுள்ளது என இருவகைப்படும். இதில் முன் கூறியது—அதாவது அசுத்தம்—லோகபந்தங்களுக்கு வழிகாட்டியாகவுள்ளது; ஆனால் மற்றதோ—சுத்தமோ நற்குணங்களை விருத்திசெய்து பந்தங்களிலிருந்து விடுதலையடையக் காரணமாகின்றது.

மனோலயா அல்லது தியானிக்கத்தக்கப் பொருள்களில் ஸ்திரமில்லாத மனதினால் உலகபந்தங்களிலிருந்து விடுதலையடைய முடியாது. மனோன்னஸா அல்லது ஸ்திரபுத்தி ஒன்றினாலேயே ஒருவன் பிறப்பில்லாமை அல்லது மோக்ஷத்தையடைய முடியும்.

வஸ்துக்களில் ஆசை வைக்கலாகாது. விருப்பங்களைக் குறைக்க வேண்டும். நிராசை அல்லது வைராக்கியத்தை விருத்தி செய்யவேண்டும். வைராக்யம் மனதை இளைக்கச் செய்கிறது.

அதிகம் கூடிக்கலக்கலாகாது. அதிகம் பேசலாகாது. அதிகம் நடக்கலாகாது. அமித ஆகாரம், அதிகத் தூக்கம்கூடாது.

* * *

வேகத்தை அடக்கவேண்டும். ஆசைகளையும் வாஸனைகளையும் ஒழிக்க வேண்டும். மன உறுத்தலை அடக்கவேண்டும். நிரந்தர த்யானத்தினால் அடையப்படும் மனச்சுத்தியால் அசுத்த மனதை அகற்றல் வேண்டும். சுத்தமான **ப்ரம்மசர்யத்தை** அநுஷ்டிக்க வேண்டும். ஆத்ம வழிகளில் அறைகுறை என்பது கூடாது—கிடையாது.

மனதுடன் சண்டையிடலாகாது. திடச்சித்த அப்யாஸத்தில் கடுமையான முயற்சிகளை உபயோகிக்கலாகாது. மனம் வெவ்வேறு விஷயங்களில் தாவிக்குதிக்கும் பொழுது அதையடக்கக் கடுமை முயற்சிகளைக் கையாளாமல் அது போகும் வழியிலேயே சிறிதளவு விட்டுப்பிறகு சளைக்கும் சமயம் திருப்ப வேண்டும். ஆனால் அது கொஞ்சம் தளத்தியவுடனே கட்டிலில்லாத குரங்கைப் போல் பல்வேறு விஷயங்களில் தாவிக்குதிக்கும். பிறகு அது, தானே சிறிது சிறிதாகச் சாந்தமடைந்து உன் உத்திரவை எதிர்நோக்கி நிற்கும்.

* * *

துர் எண்ணங்கள் மனதில் குடி கொள்ளுங்கால் தீவிர திடச் சித்தத்தினல் அவைகளை விரட்ட முயற்சிக்கலாகாது. தேகத்தின் சக்திதான் குறையும். சித்தத்திற்கு அபராதம் விதிப்பதாகும். சோர்வடையும். முயற்சிகள் எவ்வளவு அதிகப்படுகின்றனவோ அதைவிட இருமடங்களவில் அத் துர் எண்ணங்கள் திரும்ப வந்துசேரும். அவைகள் அதிசீக்கிரமாகவே வரும். எண்ணங்கள் அதிக பலமுள்ளவைகளாகும். ஆகையால் அலக்ஷியமாக இருக்கவும். சாந்தமாகவும் இருக்கவும். அவ்வெண்ணங்களுக்கு அசைவில்லா சாக்ஷியாக இருத்தல் வேண்டும். ஆனல் அவைகளுடன் கலக்கக்கூடாது. அவை விரைவில் மறையும். அவ்விடங்களில் நல்லெண்ணங்களை நிரப்பவேண்டும். பாடித் துதிசெய்யவேண்டும் கடவுளின் நாமங்களை.

ஒரு நாளாவது த்யானத்தைத் தவிர்க்காதே. தவராதிருத்தலே அதிமுக்கியம். மனம் சலிக்கும் சமயம் அதை ஓர் நிலையில் நிறுத்தக்கூடாது. சற்று ஓய்வளித்தல் அவச்யம். இரவில் கடுமையான ஆகாரத்தைப் புசிக்கலாகாது—இலகுவில் ஜீர்ணமாகக் கூடியவையாக இருத்தல் வேண்டும்—அவைகள் காலைவேளை தியானத்தைத் தடை செய்யும்.

ஜபம், கீர்த்தனை, பாராயணம், ஸத்ஸங்கம்—சாதுக்களின் சேர்க்கை, ஸம, தம, யம, அப்யாஸங்கள் வேண்டும்.

சாத்விகமான ஆகாரம்—பரிசுத்த ஆகாரம் தெய்விக நூல்களின் அப்பியாசம், தியானம், விசாரங்கள்—ஆத்ம விசாரங்கள் (அதாவது வாதித்து விஷயங்களையறிதல்) இவைகளே மனதையடக்கி பிறப்பு இறப்பில்லாத நித்யானந்தத்தை—மோக்ஷத்தை அடையும் மார்க்கம்.

* * *



# பதனீர்

ர. பா. மு. கனி

"பதனீர் சாப்பிடுவதை அசிங்கமாகக் கருதுகிறவர்கள் இன்றும் இருக்கத்தான் இருக்கின்றார்கள். நான் ஒரு தடவை பதனீர் குடித்ததற்குத்தான் என் வாத்தியார் வைகுண்டமையர் பெஞ்சிமேல் ஏற்றிவிட்டார். பாவம்! அதிலிருக்கக் கூடிய சத்தை அவர் அறிந்திருந்தால் அப்படிச் செய்திருக்கமாட்டார்" என்றான் பக்ஷி. நான் அவனுடைய கிராமத்திற்குப் போயிருந்தேன். என்னை அவன் பதனீர் சாப்பிட அழைத்துச்சென்றான். வழியில்தான் அவன் இப்படிச் சொன்னான்.

நான் கேட்டேன்: "ஏண்டா பக்ஷி, பதனீர் உஷ்ணத்தைத்தான் குறைக்கிறது என்று சொல்வார்கள். அதில் வேறென்ன அப்படிப் பிரமாதமான சத்து இருக்கிறது?"

"அட பிரகஸ்பதி! நீ படித்த படிப்பு இவ்வளவுதானா? என்னமோ 'விடமின்' என்று சொல்லுகிறார்களே, அது பதனீரில் நிறைய உண்டு. சீமைக்குப்போய் அதை விலைகொடுத்து வாங்கவேண்டுமென்பதில்லை."

"கொஞ்சம் விரிவாய் விளங்கும்படி சொல்லப்பா" என்றேன். அவன் சொன்னான்:

"உலகத்திலே விடமின் மிகுதியும், மலிவுமான ஒரு பானம் உண்டென்றால் அது பதனீர்தான். நான் பெருமைக்குச் சொல்லவில்லை. உண்மையிலேயே அப்படித்தான். மாசி, பங்குனி, சித்திரை மாதங்கள்தான் பதனீருக்குப் பாளை சீவுங்காலம். சித்திரைமாதச் சிறந்த பெருங்காற்றில் பதனீர் வற்றத்தொடங்கும். ஆனால் இனிப்பு அதிகமாகும். துரதிர்ஷ்டம்பிடித்த தமிழ்நாட்டு ஏழைமக்களில் பலருக்கும் கிடைக்கும் பானம் இது ஒன்றுதானப்பா. ஆகவே இதை 'ஏழைகள்பானம், நாம் குடிக்கக்கூடாது' என்று அலக்ஷியஞ்செய்து விடுகின்றன பணமூட்டைகள்... அதோ தெரிகிறதே பனைவிளை, அதில் பதனீர் இறக்குவதையும் அங்கே உள்ள சின்னக் குடிலில் அதைக் கருப்புக் கட்டிக்காகக் காய்ச்சுவதையும் அங்கேபோனால் பார்க்கலாம்."

"அதெல்லாம் எனக்குத் தெரியும். பதனீரிலிருக்கும் சத்துக்களைப்பற்றி ஏதோ சொல்வதாகச் சொன்னாயே?"

"ஆமாம். அவசரப்படாமல் கேள். காலைமாலை இரு வேளைகளில் பதனீருக்காகப் பாளைசீவுவார்கள். காலையில்தான் கலயத்தில்சேரும் பதனீரை இறக்குவது. ஆனால் மாலையிலும் யாராவது கேட்டால் பதனீர் இறக்கிக் கொடுப்பார்கள். அதை மிகச் சிலாக்கியமானது என்றுகூடச் சொல்வார்கள். வெற்றிலைக்குத் தடவுவதற்குச் சுண்ணாம்பு நீத்துகிறார்களல்லவா? அதைத் தான் குழைத்து, கலயத்தின் உள் பாகத்தில் ஒரு மட்டையால் பூசுவார்கள். ஏன் உள்ளே சுண்ணாம்பைப் பூசுகிறார்கள் தெரியுமா?"

"இதுகூடவா தெரியாது! தடவாவிட்டால் பதனீர் கள்ளாக மாறிப்போய்விடும்."

"அப்படிச் சுண்ணாம்பு தடவாவிட்டால் பதனீர் கள்ளாய் ஏன் போகிறது தெரியுமா? பாளையிலிருக்கும் பதனீருக்கு அமில குணம் (acidic) இலேசாக உண்டு. அதில் புளிப்புக் கண்ணறைகள் (Yeastcells) நிறைய உண்டு. திதிப்பும் அதிகம். ஒரு அமிலத்தின் உதவியால் அந்தப் புளிப்புக் கண்ணறைகள் பன்மடங்கு கனமதிகரிக்கின்றன. அப்போது அதிலுள்ள திதிப்

புக் கொடுக்கும் சர்க்கரை மதுவாக மாறி விடுகிறது. இதுதான் கள்ளு. சாதாரண மாகப்பனையில்இருந்து இறக்கிய கள்ளில் போதைகிடையாது. இரண்டு பனைக் கள்ளோ, இரண்டு கலயத்திலுள்ள கள்ளோ ஒன்றுசேரும்போது ஒன்றி லுள்ள அமிலகுணம் மற்றொன்றோடு சேர்ந்து போதைதரும் வஸ்துவாகி விடு கிறது. காற்றின் உதவியால் புளிப்புப் பெற்று போதையை அதிகரிக்கிறது. இந்த மாதிரிக் கள்ளாகாமல் பனஞ் சாற்றைத் தடுப்பது சுண்ணாம்புதான். தடவப்பட்ட சுண்ணாம்பு இருக்கிறதே அது ஒரு அல்கலி (alkali). இது பனஞ் சாற்றைப் பதனீராக, புளித்துப் போகா மலும் இனிப்புக் கெடாமலும் பாதுகாக் கிறது.

"இனி, பதனீரிலுள்ள சத்துக்களைப் பற்றிச் சொல்கிறேன். நம் உடம்பு வளர்ச்சிக்கு மிக அவசியமான பொருள் களில்விடமின்பி(B)யும் ஒன்று. இந்தவிட மின் பி, பி 1, பி 2 என்று பல வகை களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பதனீரில் முன்னது அதிகம். இந்த விடமின், மில் அரிசிச் சாதம் சாப்பிடும் நம்மிடம் அணுகுவதில்லை. இது தவிட்டோடு போய்விடுகிறது. இதைப் பெருத்த அளவிலே நாம் பதனீரிலிருந்துபெறலாம். விடமின் பி, சர்வதேசிய அளவையில் (International Units) 3000 நமக்குத் தேவை. இந்த அளவைப் பெரும்பாலும் பதனீரிலிருந்தே நாம் பெற்றுவிடலாம். இது தேகத்தை வளர்ப்பதோடு நின்று விடுவதில்லை. ஜீரணத்தைப் பூரணமாக்கு கிறது. நரம்பு மண்டலங்களை ஒழுங்கான நிலையில் வைத்திருக்க உதவுகிறது. அடி வயிற்று நரம்புகளை (Abdominal Muscles) பதனீரிலுள்ள விடமின் பாது காக்கிறது. இரைப்பையில் ஜீரணத்திற் காகக் கசியும் காஸ்டிரிக் ரசத்தைமிகு திப் படுத்துகிறது. பித்தப்பையில் நிரம்பி இருக்கவேண்டிய சர்க்கரைப் பொருளை யும் அதிகமாக்குகிறது. தசைக் கோசங் களில் (Muscle Tissues) புளிப்பு விஷம் சேராதபடித் தடுக்கிறது. நீ, விடமின் பிக்குக்காரோட்டையும் கேபேஜையுந் தேட வேண்டியதில்லை. இந்தப் பருப்பு நிலையில் அதுகூட அதிகஞ்சேர்க்கவேண் டாம். தினம் பதனீர் குடித்துவந்தாலும் போதும்.இதில் விடமின் பி தவிர,மற்றும் ஓரிரண்டு முக்கியமான சத்துக்களும் இருக்கின்றன. அவை கால்ஷியம், அயம், பாஸ்பரஸ்,கார்போஹைட்ரேட் என்பன. நீதான் காப்பி சாப்பிடமாட்டாயே,பால் தானே சாப்பிடுகிறாய்? பசும்பால் அதில் எவ்வளவு கால்ஷியம் இருக்கிறது தெரி யுமா? 0·12 % தான். ஆனல் பதனீரில் இருக்கும் கால்ஷியமோ 0.40%. எந்தப் பாலிலும் இவ்வளவு கால்ஷியம் கிடை யாது."

"பதனீரில் இவ்வளவு கால்ஷியம் இருப்பதற்குக் காரணம் எனக்குத் தெரியும். சுண்ணாம்பில் பதனீர் சொட்டு வதனல் தானே?"

"ஆமாம். எலும்பு வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் கால்ஷியம் அவ சியமானது. சுண்ணாம்பே கால்ஷியம் என்பதற்காக அதைத் தின்னமுடியுமா? நமக்கு தினசரி 0·68 கிராம் கால்ஷியம் வேண்டும். இதில் பெருத்த அளவை நாம் பதனீரிலிருந்தே அடைந்துவிடலாம். கால்ஷியம் இருந்தால் கூடவே பாஸ் பரஸூம் இருக்கவேண்டும். ஆனல் பதனீரில் இருக்கும் பாஸ்பரஸூம் மிகக் குறைவு. நமது உடம்புக்கு இருபது மில்லிகிராம் அயம் சத்துத் தேவை. ஆனல் இதிலிருந்து நமக்குக் கிடைப் பதுவோ இருபதில் ஒருபங்குதான்."

"நாம் 'இந்திர விலாஸில்' இரண் டணைக் கொடுத்து ஒரு கிளாஸ் எலுமிச் சம்பழத்தண்ணீர் குடிக்கிறோமே, அதை விட இது எவ்வளவோ மேலாயிற்றே. இதற்கு ஆளுக்கு ஒருஅணாசிலவாகுமா?"

"ஒரு அணாவா? அரையணாக்கொடுத் தால் நீ இஷ்டப்பட்டவரையில் சாப்பிட லாம். பதனீர் பற்றிய கூனூர் அறிக்கை (Health Bulletin No. 23) சொல்கி றேன்கேள். பதனீரிலிருக்கும் சத்துக் களைப்பற்றியது அது.

| | |
|---|---|
| நீராவி | 96·2% |
| புரதம்-புஷ்டி (Protein) | 0·1% |
| உலோகம் | 0 2% |
| கார்போஹைட்ரேட் | 3·5% |
| கால்ஷியம் | 0·4% |
| பாஸ்பரம் | 0·01% |
| இரும்பு | 1·0% (மி. கி.) |

உஷ்ணப் பிரமாணம் 100கிராமுக்கு 14. விடமின் பி (சர்வதேசிய அளவை/100 கிராம்) < 5. இவ்வளவும் பதனீரில் இருக்கின்றன."

"அடேயப்பா! பக்ஷி, உணவு சாஸ்திரத்திலே இவ்வளவு தேர்ச்சி எப்போடா ஏற்பட்டது?"

"நாம் உயிர்வாழ்வதற்கு அவசியமான உணவைப்பற்றித் தெரியாதவன் உலகில் இருப்பதற்கே லாயக்கில்லை. என் வாத்தியார் வைகுண்டமைய்யர் போன்றவர்களுக்குப் பதனீர் அசிங்கமாகத் தோன்றலாம். மனதைக் குமட்டலாம். முதலில் குடிப்பவர்களுக்கு அதன் மணம் பிடியாமல் போகலாம். ஆனால் இது நம் உடலுறுதிக்காகக் குடிப்பது என்ற எண்ணத்தோடு குடித்தால் அதன் இனிமை நம்மைப் பரவசப்படுத்தும். மனதுக்கு உத்சாகத்தைக் கொடுக்கும்."

"பதனீரில் அழுக்கு, சு, எறும்பு ஒன்றும் கிடையாதென்று சொல்கிறாய்?"

"உன் 'போத்தி' ஹோட்டல் காப்பியில் இருப்பதைவிடவா? இங்கே யாரும் கலயத்தை அசிங்கப்படுத்துவதில்லை. ஈ எறும்பு விழாதபடி கூடியவரை கலயத்தை மூடித்தான் வைத்திருக்கின்றனர். பதனீரிலுள்ள கசடுகளை நீக்க ஒரு வழியும் இருக்கத்தான் செய்கிறது."

"அது எனக்குத் தெரியும், எலுமிச்சம் பழ ரசத்தைப் பிழிந்துவிட்டால் சுண்ணாம்பு அடியில் போய்விடும். தெளிந்த பதனீர் மேலே இருக்கும்."

"அதில்லையப்பா, இவ்வளவு சொன்ன பிறகும் முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டாயே. எலுமிச்சம்பழரசம் பிழிந்த பதனீரைச் சிறிது நேரம் வைத்துப்பார்; புளித்துப்போகும். எலுமிச்சம் பழ ரசத்திற்கு அமிலகுணம் அதிகம். சுண்ணாம்போ அல்கலி குணமுள்ளது. இரண்டும் சேரும்போது ஒரு புது உப்பு உண்டாகி அடியில் போய்விடுகிறது. நமக்குக் கிடைக்கும் கால்ஷியம் முதலிய சத்துக்களை இதனால் நாம் இழந்து விடுகிறோம். பதனீரில் உள்ள அழுக்குகளை கீழே படியச்செய்ய இலேசான வழி இதுதான்: எள்ளுச்செடியின் இலையைக் காயவைத்துப் பொடியாக இடித்துக் கொள்ளவேண்டும். அதில் கொஞ்சம் பதனீரில் போட்டால் பதனீர் தெளிந்துவிடும். இந்த யுத்தகாலத்தில் கழிவு பொருள்களைக்கூடவிலைக்குவிற்கிறோமே. பதனீரின் அடியில் தங்கி இருக்கும் வண்டியைத் தூரவிடவேண்டாம். உன் சடை நாயை அதைக்கொண்டு அழகு படுத்தலாம். நாயின்மேல் அதை இன்று பூசிவிடவேண்டும். நாளைக்கு அதைத் தேய்த்துக் குளிப்பாட்டிவிட்டால் நாய் பழைய அழுக்கடைந்த நாயாக இராது. அதன் உரோமங்கள் பளபளவென்று மின்னும். பார்வைக்கு முற்றிலும் புது நாயாக ஆகிவிடும்."

"சரி, பதனீர் சாப்பிடவேண்டிய வினையும் வந்துவிட்டது. அதோ பனையேறியும் வருகிறான்."

"இந்தப் பதனீரில் சுக்கு, மிளகு முதலியவைகளைப் பொடிசெய்து போட்டுச் சாப்பிட்டால் வாயுவைக் கண்டிக்கும் என்பார்கள். இதைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. வா, பனையேறியிடமே கேட்கலாம்."

## அறிவிப்பு.

சந்தாதாரர்கள் விலாச மாற்றங்களை அவ்வப்போது பாரதமணி காரியாலயத்திற்கு அறிவித்துவிடக் கோருகிறோம்.

மானேஜர்.


சென்னை ஸாகர், கிரௌன் இரு தியேட்டர்களிலும்
மற்றும் பல முக்கிய நகரங்களிலும் வெற்றியுடன் நடைபெறுகிறது
ஜெமினி
தயாரிப்பு
டைரக்ஷன்
ஆசார்யா
மங்கம்மா
சபதம்
வசுந்தரா · ரஞ்சன் · கிருஷ்ணன் · மதுரம் ··
நடித்த மகத்தான தமிழ்ப் படம்..

# நீர்நிலை யறிதல்

மொழிபெயர்ப்பு: **ராஜம்**

பூமியினுள்ளிருக்கும் ஜலத்தை அது இருக்குமிடமறிந்து கூறுவது பண்டைக் காலம் தொடங்கியே நம் நாட்டிலிருந்து வருகிறது. புதிதாக நாம் வீடுகள் கட்டினால் கிணறு வெட்டுவதற்கு முன் ஓர் ஜோஸியரை அழைத்து வருகிறோம். ஏன்? நல்ல குடி தண்ணீர் அந்த வீட்டின் எல்லைக்குள் எங்கு அகப்படும் என்று தெரிந்து கொள்வதற்கேயல்லவா! அவரும் ஏதோ சில கணக்குகள் போட்டு ஓர் குறிப்பிட்ட இடத்தில் வெட்டும்படி சொல்கிறார். அங்குதான் நல்ல குமிழியுடன் கூடிய தண்ணீர் அகப்படும் என்கிறார். நம் வீடுகளில் தற்காலமுள்ள கிணறுகள் அவ்விதம் ஏற்பட்டவைகளே.

இவ்விதம் ஆராயும் முறைப்படி அதிகப்பாடுபட்டு தக்க ஊகம் ஆராய்ச்சிகளினால், சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பே வெகு நுட்பமாகவும் அழகாகவும், உஜ்ஜயினி என்ற நகரின் அக்காலத்து மஹாபண்டிதரான **வராஹமிஹிரி** என்பார், தனது **ஸங்க்ரஹார்த்ததீபிகா** என்றதோர் புஸ்தகத்தில் எழுதியுள்ளார். அதில் அவர் பூமிக்குள்ளிருக்கும் ஜலத்தை ஆராய்ந்தறிய, பூமியின் தத்வம், சிதோஷ்ண ஸ்திதி, மழை, மரஞ்செடிகள், ஜந்துக்கள் இவ்வகைகளை வெகு நுட்பமாக ஆராய்ந்து கூறுகின்றார். அன்னரால் எழுதப்பட்ட மேற்கண்ட முறை பூமியினுள் எவ்வளவு ஜலம் கிடைக்கும் என்று கணக்கிட முடியாததைத்தவிர மற்றவிஷயங்களில் மாசற்றது என்று உலகில் எல்லோராலும் போற்றத்தக்கதே. மேற்கண்ட முறைப்படி ஒருவர் நன்கு ஆலோசித்துக் கூறுமளவில் அது ஒருக்காலும் தவறுதலடையாது என்பது திண்ணம்.

ஆனால் ஒருவரேனும் அதை மேலும் விருத்தி செய்தாரில்லை. மற்ற நாடுகளிலோ பலர் அவற்றை தற்கால ஸாதனங்களுக்கேற்றவாறு விருத்தி செய்து வந்திருக்கிறார்கள். அதற்குச் சில இயந்திரங்களையும் கண்டுபிடித்துள்ளார்கள். அவற்றை அச்சு அடித்து உலகத்தின் பல்வேறு இடங்களுக்கு அநுப்பி அவரவர்கள் கண்டறிந்ததைவிட மற்றவர்களிடம் தெரிந்துகொண்டு மேலும் விருத்திசெய்ய ஹேதுவாக விருப்பது ஓர் முக்கிய காரணம் அது விருத்தியடைய.

மேற்கண்ட முறையைக் கையாளும் ஜோஸ்யர்கள் மூலம் கண்டறிவது, தற்கால தத்துவ சாஸ்திரத்தினால் (ஸயன்ஸ்) ஆராய்வது என இரு வழிகளே இப்பொழுது வழக்கத்திலிருந்து வருகின்றன. இவற்றுள் முன் கூறியது, ஸர்வ ஸாதாரணம். பின் கூறியது அதற்குத் தக்க மனிதர்கள் இல்லாததினால் சற்று சிரமமாகவுள்ளது.

**கண்டுபிடித்தல்:**

நீர் நிலை கண்டுபிடித்தல் என்பது சரீரத்தினுள் தூண்டுதல் செய்யும் ஓர்சக்தி. கண்டு பிடிப்பவரால் விவரிக்க வியலாத அச்சக்தியால் ஏற்படும் ஓர் உணர்ச்சி. இவ்வுணர்ச்சிதான் தெய்விகமாகக் கருதப்படுவது. அவ்வித மனிதர்கள் தாங்கள் போய்க்கொண்டிருக்கும் பொழுதே பூமியினுள் நீர் நிலை இருப்பதை யுணர்கிறார்கள். அவர்களே மிக விலையுயர்ந்த உலோக வகைகளையும் கூறுகின்றார்கள். ஆனால் இதைக்கூறும் விதம் மாறுபாடானது. இதில் பலர் பலவிதமான கருவிகளை உபயோகிக்கின்றனர். பிளம், பாப், ஆங்கில எழுத்துT அல்லது Y போல் நுனியில் வளைவாகவுள்ள இரும்புக் கம்பிகள், அதே வடிவமுள்ள மரக்கிளைகள், இரு பிரம்புகளை ஓர் மரக்கோணில் சேர்க்கப்பட்டது போன்றன. இவைகளை யுபயோகிக்காதவர்கள் பலர் தங்களுக்குள்ளேயே விசித்திரமான ஆத்ம சக்தியை உடையவர்களாக விருக்கின்றனர். சிலர் குளிர்ந்தும்,சாந்தமாகவுமுள்ள மோனநிலையை விரும்புகிறார்கள். சிலர் ஓர் இடத்திலிருந்துகொண்டு துதி செய்கிறார்கள். இம்மாதிரி பலர் பலவிதமாக அதைக்கண்டுபிடிக்கிறார்கள்.

நீங்கள் அதை எவ்விதம் அறிகிறீர்கள் என்று அவர்களைக் கேட்டால் அதற்கு அவர்கள் பலவிதமாகக் கூறுகின்றனர்; சிலர் தாங்கள் ஏதோ விநோதமான சப்தங்களை கேட்பதாகவும், மற்றும் சிலர் தேகத்தில் ஓர்வித நடுக்கம் ஏற்படுவதாகவும், இன்னும் சிலர் தங்களுக்குள் விசித்திரமானதோர் உணர்ச்சி ஏற்படுவதாகவும் கூறுகின்றனர். கம்பியை உபயோகிப்பவர்கள் அது ஜலஓட்டமுள்ள இடத்தில் வளைவதாகவும் சொல்கிறார்கள். கம்பி சிலஇடங்களில் மேலும், வேறு சில இடங்களில் கீழும் வளைவதுண்டு அதை இடுப்புக்கு மேலும், கீழுமாகப் பிடித்திருக்கும் சமயங்களில். இம்முறைகள் ஒன்றையுமே கையாளாதவர்களுமுண்டு. ஆனால் அவர்கள் ஜலம் இருப்பதை மாத்திரம் உணர்கிறார்கள்.

இம்மாதிரிப் பல வழிகளிருக்கின்றன. ஒவ்வோர் வழியையும் கடைப்பிடிப்போர் அநேகர் உவர். இவற்றில் வேஷதாரிகளும், பாசாங்குக்காரர்களும் பலர் இருக்கின்றனர். ஆனால் உண்மை அறிவாளிக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது மிக்க கடினம். இதை எழுதிய N. G. ஆப்ட் என்பவர் ஓர் சமயம் நீர்நிலையறியும் ஆட்டோ மேடிக் இயந்திரத்தின்மூலம் சதாரா ஜில்லாவில் ஒரு வரண்ட பிரதேசத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அவர் சுமார் 6 இடங்களைப் பரீக்ஷித்துவிட்டார். கடைசியாக ஓர் இடத்தில் பரீக்ஷித்துக் கொண்டிருக்கும் சமயம் அவ்வழியே சென்றுகொண்டிருந்ததோர் பிச்சைக்காரச் சிறுமி அங்கு சற்று நின்று அது யாது என்று வினவினள். அவரும் விஷயத்தை உண்மையாக உரைத்தார். முற்றிலும் வேறானதோர் இடத்தைக் காட்டினள் அச்சிறுமி. ஆச்சரியமுற்ற அவர் அங்குசென்று பரீக்ஷித்ததில் அது நல்ல பலனை யளிக்கவே அவர் அச்சிறுமியை நோக்கி எங்ஙனம் அவளதை அறிந்தாள் என்பதைக் கேட்கலுற்றார். தனக்குள் ஓர் உணர்ச்சியேற்பட்டதாக மட்டும் அவள் கூறினள். மேல் எதுவும் சொல்ல அவளுக்கு விளங்கவில்லை.

இவ்விதம் வெற்றிகரமாகக் கண்டறிதலுக்குப் பிறர் பின்பற்றக்கூடிய வரமுறையோ கூறுபாடோ இல்லையாதலால் அது பழக்கத்திற்கொண்டுவர முடியவில்லை. பம்பாய் கவர்ன்மெண்டார் நீர் நிலையறிவோர் பலரை ஏற்படுத்தினர். அவர்களும் தாங்கள் கண்டறிந்தவைகளை எழுதியுள்ளார்கள். மேற்குறிப்பிட்ட ஆப்ட் என்பவரும் அவர்களுள் ஒருவரே.

இவரும் தன்னுடைய ஆடோமேடிக் இயந்திரத்தின் மூலம் கண்டுபிடிக்கப் பிரயத்தினங்கள் பல செய்தார். ஆனால் அவை முற்றுப்பெறவில்லை. அந்த விஷயங்களைப் பற்றி விவரமாகக் கூறவில்லை. ஆதனால் ஏற்பட்ட குணம் 50 சதமானத்திற்குக் குறைவேயாகும்.

### ஆப்ட் என்பாரின் கண்டுபிடிக்கும் சக்தி:

ஊற்று உள்ள இடங்களைக்கடக்கும்பொழுது தனது கால் ஆடுசதையில் உணர்ச்சியையும், ஆற்றுப்படுகைகளில் செல்லும் பொழுது வலியையும் அடைகிறார்—இவைகள் மழைக்காலங்களில். 1933-ம் வருஷம் வரையில் அது பூமிக்குள்ளிருக்கும் நீரோட்டத்துடன் சம்பந்தப்பட்டதாக அறியப்படவில்லை. சதாரா ஜில்லாவில் கதார்கதாவ் என்னும் கிராமத்தில் முதலில் ஆடோமேடிக்இயந்திரத்தினால் கண்டறிய முயற்சித்தார். ஐந்து பூமிகளில் முப்பது இடங்களைப் பரீக்ஷித்தார். ஓர் இடத்தில் தன் கால் ஆடு சதையில் வலியை உணர்ந்தார். பல இடங்களில் பரீக்ஷையால் ஏற்பட்ட அளவுகள் எடுக்கப்பட்டு மேலதிகாரியிடம் தரப்பட்டதில் அவர், இவர் வலியை உணர்ந்த இடம்தான் நல்ல ஜலம் அதிகமுள்ளதாகத் தீர்மானித்தார். இவ்விதம் பல முறைகள் நடந்தன. இந்த வலி நீர் நிலையினால் ஏற்படுவதென்பதை 1933-ம் வருஷம் வரை அறியார்.

இதனால் நீர்நிலையறிய முன்பு கூறிய பல வழிகளும் உண்மை என்று ஏற்படுகிறது. இருந்தபோதிலும் அதில்உண்மை

பூரணமாக தக்க முறையில் பலர் பின்பற்றக் கூடியதாக இல்லாததால் வேஷதாரிகளும் ஏற்படுகின்றனர். ஆனதால் உண்மை பேர்களை கண்டறிய வேண்டிய அவச்யம் ஏற்படுகின்றது. அவர்களின் பலன்கள் போதிய அளவு திருப்தி அளிக்கக் கூடியதாகவில்லை. இதனால் மனிதனே பாதிக்கப் படுகிறான். முக்கியமாக நரம்புஸ்தானங்கள் பாதிக்கப் படுகின்றன. இதனால் அவன் எந்த நல்ல வேலைக்கும் சக்தியற்றவனாகிறான். மனிதனின் ஆரோக்கியமும் அவச்யமாகிறது. இவைகள் நல்ல நிலைமையில் இருந்தால்தான் அதன் குணமும் (நீர் நிலையறிதலும்) நன்றாகவிருக்கும். ஆனால் இது அபூர்வம். குணங்கள் 100% சரியாக விருக்க மனிதன் தனியாக அவனிஷ்டப்பட்ட அவகாசம் அளிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் யந்திர மூலமறியும் வகைக்குச் சற்றும் குறைவில்லாத நிலைமையில் இவர்களும் இருப்பார்கள்.

### தத்வசாஸ்திரியும், நீர் நிலையறியும் இயந்திரமும் :

மற்றோர்முறை தத்வசாஸ்திரிகளாலாவது. அவருடன் இயந்திர சாதனமும் சேர்ந்தேவரும். தத்வசாஸ்திரம் மட்டும் பிரயோஜனமில்லை. அவர் மற்ற விஷயங்களையும் அறிந்திருக்கவேண்டும். அவை யாவன:- அப்பிரதேசத்தின் மழையளவு, சீதோஷ்ணஸ்திதி, பூமிமட்டம், மேல் மண், அடிமண் இவற்றின் இழுத்துத் தேக்கவைக்கும் சக்தி முதலியன. இதன்றி பக்கங்களில் நீர்மட்டம் இயற்கையா, செயற்கையா, கிடைக்கக் கூடிய அளவு தேவை. சுருங்கச் சொல்லின் அவர் நீர்நிலையறிதலை பாதிக்கும் பல பொருள்களின் அறிவையும் பெற்றிருக்க வேண்டும். இத்துடன் இயந்திர ஸாதனமும் சேர்ந்தால் நல்ல பலனை யளிக்கிறது. இது பலரும் பின்பற்றி விருத்திசெய்யக்கூடிய முறையாகிறது.


மான்ஸ்பீல்ட், ஸ்மித் என்ற இருவித இயந்திரஉபயோகத்தில் சில விஷயங்களை கவனித்தல் அவச்யம். சதுப்பு நிலங்களிலும், அதிகம் குளிர்ந்த விடங்களிலும், உபயோகிக்கக்கூடாது. பெரு மரங்களுக்கும் கட்டிடங்களுக்கும் சமீபத்தில் கூடாது. எலக்டிரிக் கரண்டிலும், இரும்பினாலும் அது பாதிக்கப்படும். மப்பும் மந்தாரமுமுள்ள சமயம் கூடாது. அதிகம் குளிர்ந்தும், அதிகம் உஷ்ணமாயுமுள்ள சமயங்களில் அதுசரியாக வேலை செய்வதில்லை. ஆகையால் தக்க காலத்தில் அதை உபயோகிக்க வேண்டும். மண்ணின் சீதோஷ்ணஸ்திதி 100°F (அல்லது 30°C)க்கு அதிகப்பட்டாலும் 85°F (அல்லது 29°C)க்கு குறைந்தாலும் இயந்திரம் சரியான அளவு காட்டாது.

### இயந்திரங்களின் குறைநிசயங்கள்:-

ஸ்மித், மான்ஸ்பீல்ட் என இருவகை இயந்திரங்களுண்டு. அவற்றுள் ஸ்மித் வகையில் வடக்கு நோக்கிவைக்க, யந்திரத்தின் மேற்பகுதியில் பக்கத்தில் வட்டமான ஒரு கண்ணாடியுண்டு. இதன் மூலம்தான் அளவு எடுத்தல் வேண்டும். ஆனால் மற்றொன்றில் இது தெற்கு நோக்கியுள்ளது. அவற்றுள் ஆப்ட் என்பார் மான்ஸ்பீல்ட்தான் நல்லமுறையிலும், நல்ல பயனளிப்பதாயுமிருக்கிறது என அநுபவத்தின் மூலம் குறிப்பிடுகிறார். நீரோட்டம் செங்குத்தாகவுள்ள இடங்களுக்குகந்தவாறு அமைக்கப்பட்டிருக்கிறது இயந்திரம். இதைப் பரீக்ஷிக்க இயலாது. பம்பாய் மாகாணத்தில் நடந்த 25 வருஷ வேலையின் உண்மையிலிருந்து அறிய வேண்டியதே. மேற்கண்டபடி விஷயங்களறிந்த தத்வ சாஸ்திரியால் இந்தஇயந்திரம் ராவ் பகதூர் டாக்டர் D. L. ஸகஸ்ரபூதி என்பவரால் குறிப்பிட்டபடி நன்கு உபயோகிக்கப்படில் சந்தேகமின்றி பயனையளிக்கும்.

இயந்திரமிருந்தால் தாங்கள் கண்டு கொள்ளலாம் என எண்ணுகின்றனர் சிலர்; அது முற்றிலும் பிசகு; மற்ற விஷயங்களின் அறிவு இருந்தால்தான் அது நல்ல பலனைத்தரும்.

(இண்டியன் பார்மிங்.)




தன், கடமையைச் செய்வதே மனிதனின் முக்கிய லக்ஷியம். கடந்தவைகளைப் பற்றியும் பிற்கால நிலைமையைப் பற்றியும் நினைத்து மனக்கோட்டை கட்டுவது முறையல்ல. பிற்கால நன்மைகளை இன்றே சீர்படுத்திக்கொள்ளல் வேண்டும்.




**நீங்கள் உங்களுடைய கடமையை செய்தீர்களா?**

எங்கள் கம்பெனியில் இன்றே இன்ஷ்யூர் செய்யுங்கள்.

## நாஷனல் இன்ஷ்யூரன்ஸ்

7. கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

362, சைனபஜார் ரோடு, எஸ்பிளனேட், மதராஸ்.




# நீதியின் வெற்றி

திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

ஓர் ஊரில் ஒரு அம்பட்டனும் ஒரு வண்ணானும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். அம்பட்டன் பெயர் கந்தன். வண்ணான் பெயர் முனிசாமி. இருவரும் கோபமும் கர்வமும் உள்ளவர்கள். முனிசாமியின் கழுதை உடலில் மயிர் வளர்ந்து விகாரமாக இருந்தது. ஆனால் நன்றாக உழைத்து வந்தது. ஒரு நாள் முனிசாமி கந்தனிடம் வந்து "என் வீட்டில் ஒருவருக்கு க்ஷவரம் செய்ய வேணும். வா" என்றான். கந்தன் "வருகிறேன். ஆனால் என் வீட்டில் கல்யாணம் நடந்து வெகு உறவினர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் துணிகளை நீ தாமதமின்றி வெளுத்துத் தரவேணும், இல்லாவிட்டால் நான் வர முடியாது" என்றான். முனிசாமி இதற்கு ஒப்புக்கொண்டான். கந்தன் முனிசாமி வீட்டிற்கு வந்த உடனே முனிசாமி தன் கழுதையைக் காட்டி இதற்குத்தான் க்ஷவரஞ் செய்ய வேணுமென்றான். அதைக் கேட்டதும் கந்தனுக்குக் கோபம் பொங்கிற்று. முனிசாமியைப் பற்றி வசைச் சொற்களை சரமாரியாகப் பொழிந்துவிட்டு க்ஷவரஞ் செய்ய மறுத்துப் போய்விட்டான். உடனே முனிசாமி அந்த ஊர் நீதிபதியிடம் முறையிட்டான். அவர் கந்தன் சொன்ன மிதமிஞ்சிய வசைச் சொற்களைப்பற்றி அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணித் தீர்மானம் சொன்னார்.

**நீதிபதி:** கந்தா! நீ க்ஷவரம் செய்வதாக ஒப்புக்கொண்டாயா?

**கந்தன்:** ஆம்.

**நீதிபதி:** என் அப்படி செய்ய மறுக்கிறாய்?

**கந்தன்:** கழுதைக்கா க்ஷவரம்?

**நீதிபதி:** நீ பொதுவாகத் தானே ஒப்புக்கொண்டாய்?

**கந்தன்:** ஆம்.

**நீதிபதி:** அப்படியானால் நீ செய்துதான் தீரவேணும்.

வேறு வழியில்லாமல் அப்படியே செய்தான். பிறகு அவன் ஒரு பெரிய துணி மூட்டையை முனிசாமியிடம் கொடுத்து வெளுத்துக் கொண்டுவரச் சொன்னான். அதற்குள்ளாகக் கழுதை கடவுள் கொடுத்த போர்வையை இழந்ததால் குளிர் தாங்காமல் காய்ச்சல் கண்டு இறந்துவிட்டது. முனிசாமி "நீ செய்த வேலையில் என்கழுதை இறந்துவிட்டது. என் துணி மூட்டையை சுமந்து கொண்டு ஆற்றுக்குப் போக ஒரு

கழுதையைக் கொண்டுவா. இல்லா விட்டால் நீதான் கழுதைப் போல் சுமந்து கொண்டுவா" என்று கந்தனிடம் கோபமாகப்பேசி தாறு மாறாக வைதான். உடனே கந்தன் நீதிபதியிடம் முறையிட்டான். அவர் முனிசாமிக்குப் பாடம் கற்பிக்க எண்ணினர்.

**நீதிபதி:** முனிசாமி! நீ கந்தன் துணிகளை வெளுக்க ஒப்புக் கொண்டாயா?

**முனிசாமி:** ஆம்.

**நீதிபதி:** ஏன் அப்படிச் செய்ய மறுக்கிறாய்?

**முனிசாமி:** என் கழுதை இறந்துவிட்டது.

**நீதிபதி:** நீ எப்படியாவது சொன்னபடி செய்யவேணும். மூட்டையைச் சுமந்து செல்.

வேறு வழியில்லாமல் அப்படியே செய்தான். பிறகு நீதிபதி அவர்களுக்கு நல்ல புத்தி புகட்டினர். பின்பு அவர்கள் நல்ல குணமுள்ளவர்களாகவும் நண்பர்களாகவும் இருந்தார்கள். ஆகையால் நாம் எல்லோரிடத்திலும் நேசமாகவும் மரியாதையாகவும் இருக்கவேணும்.

---

## யார் எறிந்தது?

'புனிதன்'

**பெரிய**தொரு காடு. அதனையடுத்து அட்டத்தியானதொரு தென்னஞ்சோலை. அந்தச் சோலையில்தான் ஒட்டைச்சிவிங்கி வாத்தியார் தனது மாணவர்களுக்குப் பாடம் சொல்லிவந்தார்.

முயல், முள்ளம்பன்றி, வரிக்குதிரை ஆகிய எல்லா மிருகங்களும் ஒட்டைச்சிவிங்கியாரிடமே பாடங் கேட்டுவந்தன.

அவர்கள் கூட்டத்தில் ஒரு குறும்புக்காரக் குரங்கும் இருந்தது. அது சரியாகப் பாடங்கள் கேட்பதுமில்லை; ஒரு நாளாவது வாத்தியாரிடம் உதை வாங்காமல் இருப்பதுமில்லை.

ஒரு நாள் அது வேண்டுமென்றே வகுப்புக்கு வரவில்லை. ஒருவருக்கும் தெரியாமல் ஒரு தென்னைமரத்தின் உச்சியில் ஏறி இருந்துகொண்டது. வழக்கம் போல், கீழே வாத்தியார் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். நல்ல சமயம் பார்த்து, மரத்தின் உச்சியில் இருந்த குரங்கு ஒரு பெரிய தேங்காயைப் பறித்து ஆசிரியரின் மேல் விட்டெறிந்தது. குறி தவறவில்லை. ஒட்டைச்சிவிங்கியின் தலையே சிதறிவிட்டது. ஐயோ பாவம்!

படித்துக்கொண்டிருந்த மிருகங்களுக்கிடையில் ஒரே பரபரப்பு. "யார் எறிந்திருக்கக் கூடும்?" என்று அங்கு மிங்கும் ஓடின. அப்பொழுதுதான் சூரியன் ஒரு பெரிய கருமேகத்தினுள் ஓடோடி ஒளிந்து கொண்டிருந்தான்.

சூரியன்தான் எறிந்திருக்கக் கூடும் என்று எண்ணி மிருகங்கள் அவனை நெருங்கின. "நீ ஏன் எங்கள் ஆசிரியர் மீது தேங்காயை விட்டெறிந்தாய்?" என்று கேட்டன. எல்லா மிருகங்களும் ஒன்று சேர்ந்துகொண்டு தன்னைக் கேள்வி கேட்பது கண்டு, சூரியன் சற்று பிரமித்தே போனான். பின் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "நான் ஏன் எறியப் போகிறேன்; எறிய வேண்டுமென்று நான் எண்ணினாலும், மேகம் என்னை உருவமே தெரியாமல் மறைத்து விடுமே" என்று கூறினான்.

"நீதான் எறிந்திருக்கக் கூடும்" என்று மிருகங்கள் மேகத்தைக் கேட்டன.

'ஐயய்யோ! என்னால் எப்படி முடியும்? காற்று சிதற அடித்து விடுமே" என்று சொல்லிவிட்டது மேகம்.

காற்று, "கோட்டைச் சுவர்கள் என்னைப் போகவொட்டாமல்தடை செய்துவிடுமே" என்றது.

கோட்டைச்சுவர், "எலி என்னைத் துவாரங்கள் செய்துவிடுமே" என்று சொல்லிற்று.

எலி, "பூனை என்னைக் கொன்று விடுமே" என்று கூறிற்று.

பூனை, "நாய் என்னைத் துரத்துமே" என்று மறுத்தது.

"கம்பு என்னை அடிக்குமே" என்று நாய் சொன்னது.

"தீ என்னை எரிக்குமே" என்றது கம்பு.

தீ,"தண்ணீர் என்னை அணைத்து விடுமே" என்றது.

தண்ணீர்,"யானை என்னைக் குடித்துவிடுமே" என்று சொன்னது.

யானையும், "குரங்கு என்னைப் பயமுறுத்துமே" என்றது.

அப்பொழுதுதான் குரங்கு, மிருகங்கள் தன்னைத் தேடுவது கண்டு, ஒளிந்து கொள்வதற்காக அடுத்த மரத்திற்குத் தாவியது. மிருகங்கள் கண்டு கொண்டன. தான் அடைந்த பயத்தில் பிடி நழுவித் தொப்பென்று கீழே விழுந்தது குரங்கு. மிருகங்கள் எல்லாம் குரங்கைச் சூழ்ந்து கொண்டன.

"நீ என் வாத்தியாயர் மீது தேங்காயை விட்டெறிந்தாய்?" என்று மிருகங்கள் குரங்கைக் கேட்டன. குரங்கு பதில் ஒன்றும் சொல்லத்தெரியாமல் விழித்தது. எறிந்தது அதுதான் என்று அறிந்துகொண்ட மிருகங்கள் குரங்கை எளிதில் விட்டு விடுவதாகக் காணோம்.

மிருகங்கள் ஒவ்வொன்றும் குரங்கின் மீது தங்களுக்குள்ள கோபத்தைத் தங்கள் கைகளாலும் வாயாலும் தீர்த்துக்கொண்டன. குரங்கிற்கும் 'பட்டது போதும்' என்றாயிற்று. தான் செய்தது தவறு, தவறு, தவறு என்று மிருகங்களிடம் மன்றாடி மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

Edited & Published by K. S. Venkataramani. at No. 45, Mahadana Street, Mayavaram. printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Pres, 29, Mahadana Street, Mayavaram.